மாலை 49 மணி 5 மே 2007 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



## வெற்றி நல்கும் அருள்மிகு விஜய விநாயகர்



# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்


திருஅண்ணாமலை - 606 601. தமிழ்நாடு. இந்தியா.
Website : www.arunachaleswarar. com
e-mail : dc@arunachaleswarar. com
அலுவலகம் : 252438


## ஸர்வஜித்து ஆண்டு 2007 - 2008 பௌர்ணமி கிரிவலம் வரும் நாட்கள்

| மாதம் | ஆரம்பம் | முடிவு | கிரிவலம் வரும் நாள் |
|---|---|---|---|
| மே 2007 | 01.05.07 செவ்வாய் பகல் 2.00 | 02.05.07 புதன் மாலை 3.57 | 01.05.07 செவ்வாய் |
| மே 2007 | 31.05.07 வியாழன் காலை 5.47 | 01.06.07 வெள்ளி காலை 7.07 | 31.05.07 வியாழன் |
| ஜூன் 2007 | 29.06.07 வெள்ளி இரவு 7.47 | 30.06.07 சனி இரவு 8.11 | 29.06.07 வெள்ளி |
| ஜூலை 2007 | 29.07.07 ஞாயிறு காலை 7.52 | 30.07.07 திங்கள் காலை 7.18 | 29.07.07 ஞாயிறு |
| ஆகஸ்ட் 2007 | 27.08.07 திங்கள் மாலை 6.17 | 28.08.07 செவ்வாய் மாலை 4.53 | 27.08.07 திங்கள் |
| செப்டம்பர் 2007 | 25.09.07 செவ்வாய் இரவு 3.52 | 26.09.07 புதன் இரவு 1.54 | 26.09.07 புதன் |
| அக்டோபர் 2007 | 25.10.07 வியாழன் பகல் 1.15 | 26.10.07 வெள்ளி காலை 10.57 | 25.10.07 வியாழன் |
| நவம்பர் 2007 | 23.11.07 வெள்ளி இரவு 11.11 | 24.11.07 சனி இரவு 8.52 | 23.11.07 வெள்ளி |
| டிசம்பர் 2007 | 23.12.07 ஞாயிறு காலை 9.52 | 24.12.07 திங்கள் காலை 7.50 | 23.12.07 ஞாயிறு |
| ஜனவரி 2008 | 21.01.08 திங்கள் இரவு 9.33 | 22.01.08 செவ்வாய் இரவு 8.09 | 21.01.08 திங்கள் |
| பிப்ரவரி 2008 | 20.02.08 புதன் காலை 10.13 | 21.02.08 வியாழன் காலை 9.41 | 20.02.08 புதன் |
| மார்ச் 2008 | 20.03.08 வியாழன் இரவு 11.57 | 21.03.08 வெள்ளி இரவு 12.24 | 21.03.08 வெள்ளி |

01. பௌர்ணமி நாட்களில் பொது தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

02. சிறப்புத் தரிசனக் கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.20/- (வழி கிழக்கு ராஜகோபுரம்)

03. விரைவு சிறப்புத் தரிசனக் கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.50/- (வழி அம்மணி அம்மன் கோபுரம்)

04. சேவார்த்திகள் காணிக்கையாகச் செலுத்த விரும்பும் தானியங்கள் மற்றும் காய்கறிகள் மட்டும் ஸ்ரீசம்பந்த வினாயகர் சன்னதியருகே வைக்கப்பட்டுள்ள காணிக்கை அண்டாக்களில் சேர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதர காணிக்கைகள் வழக்கம் போல் உண்டியலில் செலுத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

05. கிழக்கு ராஜகோபுரத்தின் உட்புறம், சேவார்த்திகள் பிரார்த்தனையினை முன்னிட்டு, ஸ்ரீகம்பத்திளையனார் சந்நிதியருகில், திருக்கோயிலின் மூலம் நெய்தீப விற்பனை நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பி.வாசுநாதன்.எம்.ஏ.பி.எல்.,
துணை ஆணையர்/செயல் அலுவலர்

வ.தனுசு,எம்.எஸ்ஸி.,
அறங்காவலர் குழுத்தலைவர்

பெ.கோவிந்தன்
க.மணிவர்மா
ஆ.பானுமதி அருணகிரி
இர. சீனிவாசன்
அறங்காவலர்கள்.




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2038 ஸர்வஜித்-வைகாசி
மாலை 49 மணி 5 மே 2007


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

''முருகு'' என்றால் ''அழகு'' என்று பொருள். தமிழுக்கு, தமிழ் மண்ணுக்குச் சிறப்புடைத் தலைவன் முருகன். இளவேனில் முடிந்து முதுவேனில் தொடங்கும் வைகாசித் திங்களில் வரும் விசாக நட்சத்திரத் திருநாள் தமிழ்க் கடவுளாம் முருகன் அவதரித்த நாள். இந்நன்நாளில் முருகப்பெருமான் பராசர முனிவரது மக்களுக்கு சாப விமோசனம் அளித்தருளினார். இந்நாளில் முருகப்பெருமானை வணங்கினால் ஆண்டு முழுவதும் வழிபட்ட பயன் பெறலாம் என்பர். நாமும் வைகாசி விசாகத்திருநாளன்று முருகப்பெருமானை வழிபட்டு வாழ்வில் வளம் பெறுவோமாக.

சமணத்தை விடுத்து, சைவ சமயத்தைத் தழுவிய அப்பர் சுவாமிகளை, கல்லோடு கட்டிக் கடலில் போட்ட நிலையில் கல்லையே தெப்பமாகக் கொண்டு ''சொற்றுணை வேதியன்'' எனும் பதிகம் பாடி, அப்பர் பெருமான் கரையேறிய நிகழ்ச்சியினை அப்பர் மட்டும் கரையேறவில்லை, சைவ சமயமும் தரையேறியது என்றும், இதனை நினைவூட்டும் வகையில், ''கரையேறவிட்ட குப்பத்தில்'' இன்றும் நடைபெறும் இவ்விழா மாண்புகள் பற்றியும், திருப்பாதிரிப்புலியூரின் சிறப்புகளையும், தொகுத்து ''காசினி போற்றும் கறையேறவிட்ட முதல்வன்'' எனும் தலைப்பில் தமிழாகரர் திரு தெ.முருகசாமி அவர்கள் சிறந்ததொரு படைப்பினை இவ்விதழில் வழங்கியுள்ளார்.

இளையான்குடி மாற நாயனாரும், அவர்தம் துணைவியாரும் வறுமை நிலையிலும் அடியார்க்குச் செய்த அருந்தொண்டினைப் போற்றி, இறைவன் அருட்காட்சி தந்து சிவபதம் அளித்ததை, சேக்கிழார் பெருமான் ''வருமைப் பதம்'' என்று எடுத்தாண்டு சிறப்பித்துள்ளமையைத் தனக்கே உரிய இனிய நடையில் வழங்கியுள்ளார் புலவர் மு.இராசரத்தினம் அவர்கள்.

பரசுராம அவதாரத்தினை அருளிச் செயல்களில் எவ்வாறெல்லாம் ஆழ்வார் பெருமக்கள் எடுத்தாண்டுள்ளனர் என்பதை ''அருளிச் செயல்களில் பரசுராம அவதாரம்'' எனும் தலைப்பில் வளவ. துரையன் அவர்களும், ஆறாம் திருமுறையில் அப்பர் பெருமான் வழங்கியுள்ள திருத்தாண்டகச் சிறப்புகளை மிக அற்புதமாகத் தொகுத்து முனைவர் அ.அறிவொளி அவர்களும் வழங்கியுள்ளனர்.

மனித வாழ்விற்குத் தேவையான வழிமுறைகளை வழங்கியுள்ள ''திருமூலரின் திருமந்திரச் சிறப்புகளை'' முத்துச் சிதறலாகத் தொகுத்து வழங்கியுள்ளார் பேராசிரியர் முனைவர் ச.கணபதிராமன் அவர்கள்.

ஆன்மிகத் தென்றல், கிருபானந்தவாரியார் சுவாமிகளின் ''கந்தபுராண நுண்பொருள்'' நினைவலைகளாகவும், பேராசிரியர் டாக்டர். சரசுவதி இராமநாதன் அவர்களின் ''கந்தரனுபூதி''த் தொடரும், இவ்விதழில் தொடர்களாக வெளிவந்துள்ளன.

திருமழிசைஅருள்மிகு ஜெகந்நாதப்பெருமாள் மற்றும் திருமழிசைஆழ்வாரின் சிறப்புகளையும் ஆலங்குடி திருத்தலச் சிறப்புகளும் திருத்தல உலாக்களாக இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

அனைவரும் திருக்கோயில் இதழினைப் படித்து இன்பமுறுவோமாக.

அன்புள்ள

(க. பிச்சாண்டி. இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையாளர்
மற்றும் ஆணையாளர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

# ஊழையும் வென்றிடுவர் உறுதியுடன் முயற்சி செய்வோர்

**மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்**



புயலும் மழையும் ஓய்ந்து ஊர்மக்கள் வெளியில் தலைகாட்டத் தொடங்கினார்கள். ஆங்காங்கே பெருமரங்கள் அடியற்றுக் கிளைகளுடன் வீழ்ந்து கிடந்தன. காற்றுக்கு வளைந்து கொடுத்துத் தப்பித்துக் கொள்ளும் நாணலும், படுகை மண்ணோடு தூக்கியெறியப்பட்டுத் தலைகுப்புறச் சாய்ந்து கிடந்தது. ஊர்க் கோயிலின் கோபுரத்துக் கலசம், ஒரு கல் தொலைவுக்கப்பால் உருண்டு கிடந்தது. கால்நடைகள் ஒன்றிரண்டு தெருக்களில் மூச்சற்றுக் கிடந்தன. கிழங்கள் நடுங்கும் மேனியைப் போர்த்துக்கொண்டு தங்கள் இல்லத்துத் திண்ணைகளில் படுத்திருந்தன. வீதிகளில் தேங்கியிருந்த மழைநீர்க் குட்டைகளில் குறும்புசெய்யும் இளைஞர் கூட்டம் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. கழனிகளில் தலைசாய்ந்து மிதந்த வண்ணமிருந்த நெற்கதிர்களை உழவர்கள் பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். புயலுக்குப்பின் ஏற்பட்ட அந்த அமைதியில் பெரும்பாலும் சோகத்தின் பின்னணியே ஒலித்துக் கொண்டிருந்தது. ஊரின் நடுவே தலையில் வகுத்த நேர்வகிடு போல் அமைந்திருந்த ஆறு; நிம்மதியிழந்து வெறி பிடித்தது போல் ஓடிக்கொண்டிருந்தது. கடுமழையும் புயலும்தான் ஆற்றின் ஆவேசத்துக்குக் காரணம் இலைதழைகள், கிளைகள், ஆட்டுக்குட்டி, கன்றுக் குட்டிகளின் சவங்கள் ஆற்றின் தோள்மீது சவாரி செய்து கொண்டிருந்தன.

ஊர் நாட்டாண்மைக்காரரும், அவருடைய உதவியாளரும் ஆற்றின் வேகத்தைக் கண்டவாறு ஆற்றங்கரை மீது நடந்து வந்து கொண்டிருந்தனர். அப்போது எதிர்க்கரையில் ஒரு கட்டுடல் படைத்த வாலிபன் ஆற்றையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். அவன் பரபரப்பு அடைந்திருந்தான். அவனை நாட்டாண்மைக்காரர் பார்த்துவிட்டு, உதவியாளரிடம் கேட்டுச் சந்தேகத்தைப் போக்கிக் கொண்டார்.

''ஏய்! எதிர்க்கரையில் நிற்பவன் நம்ம ஊர் சிங்கன்தானே?''

''ஆமாங்க! அவனேதான்! உங்க பரம விரோதி சிங்கனேதான்!''

''என்ன அப்படி, ஆற்றையே பார்க்கிறான் வைத்த விழி வாங்காமல்?''

'' சாமி! சாமி! அடேடே! ஒரு மான்குட்டி உயிருக்குத் தவிக்குதுங்க! அதோ பாருங்க ஆற்று நடுவினிலே!''

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே, எதிர்க்கரையில் நின்ற சிங்கன், மான்குட்டியைக் காப்பாற்ற ஆற்றில் குதித்துவிட்டான். குதித்தவனைச் சிறிது நேரம் காணவில்னல. நாட்டாண்மைக்காரருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

''பாரடா! பார் ! என் பகைவன் ஆற்றோடு போய்விட்டான் அமிழ்ந்து!'' என்று அவர் கூச்சல் போட்டார்!

''இருங்க சாமி! அவசரப்படாதீங்க! அவனுக்கு நீச்சல் தெரியும்'' என்றார் உதவியாளர்.

அவர் சொன்னபடியே சிங்கன் நீச்சலடித்துக் கொண்டு மான்குட்டியைக் காப்பாற்ற முன்னேறிக் கொண்டிருந்தான். ஆற்றின் கடுமையான வேகத்தைச் சமாளிக்க முடியாமல் அவன் தத்தளித்தான்.

நாட்டாண்மைக்காரர், தன் உதவியாளரிடம் சொன்னார்:

> ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்.''

என்று வள்ளுவர் சொன்ன வாக்குப் பொய்யாகப் போகாது பார்!-ஊழைவிட மிக்க வலிமையுள்ளது எதுவுமில்லை! அதை விலக்குவதற்கு மற்றொரு வழியைப் பின்பற்றினாலும் அங்கேயும் ஊழ்தான் முன்வந்து நிற்கும். எனவே, இப்போது சிங்கனைவிட ஊழ் வலிமையாக நிற்கிறது! அதோ, அவன் திண்டாடுகிறான் பார்! அவன் கைகள் ஓய்ந்துவிட்டன பார்! மான்குட்டியை வேறு தோளிலே போட்டுக் கொண்டு நீந்துவது எளிதா? தொலைந்தான் சிங்கன்!''

இவ்வாறு நாட்டாண்மைக்காரர் துள்ளிக் குதித்தார். உதவியாளர் விளக்கினார்:

''சாமி! ஊழை வெல்ல முடியாது என்பது சரிதான். ஒன்று நம்மை வெல்லும்போது ஊழ் வென்றுவிட்டது என்கிறோம்! மாறாக, நாம் வெற்றி பெறும் போது ஊழ்தான் அந்த வெற்றியை நமக்குத் தந்தது என்கிறோம். எனவே, எற்படுகிற ஒரு விளைவுக்கு நாம் கற்பிக்கிற காரணம்தான் ஊழ் என்பதாகும். அதைத்தான் வள்ளுவர் கூறுகிறார்.''

உதவியாளரின் விளக்கத்தைக் கேட்டு நாட்டாண்மைக்காரர் வியந்து போனார். அதற்குள் சிங்கனும் ஆற்றுச்சுழல்களை எதிர்த்து வெற்றி கண்டு மான்குட்டியுடன் கரையை வந்து அடைந்தான். நாட்டாண்மைக்காரருக்கு மேலும் வியப்பு! சிங்கன்மீது கொண்டிருந்த பகையைக்கூட மறந்துவிட்டு அவன் வீரத்தையும், மன உறுதியையும், இரக்கமுள்ள இதயத்தையும் பாராட்டி, ஓடிப்போய் அவனைத் தழுவிக் கொண்டார்.

''எப்படியப்பா உன்னால் இந்த பயங்கர வெள்ளத்தைக் கடக்க முடிந்தது?'' என்று அவர் முகமலர்ச்சியுடன் கேட்ட கேள்விக்குச்சிங்கன் அளித்த பதிலும் ஒரு திருக்குறள்தான்!

'' அய்யா ! சோர்வின்றி உறுதியுடன் முயற்சியில் ஈடுபடுகின்றவர்கள் ஊழையும் தோல்வி காணச் செய்து விடுவார்கள்! இதோ அதற்கு குறள்!'' என்று உரக்கப் பாடினான்சிங்கன்.

**''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்''**

அதிகாரம்: 38 ஊழ் பாடல்: 380

அதிகாரம்: 62 ஆள்வினையுடைமை பாடல்: 620

-மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக்கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது..

## இதழின் உள்ளே ....


1. ஊழையும் வென்றிடுவர் உறுதியுடன் முயற்சி செய்வோர் - தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''குறளோவியம்'' நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது 2
2. அருள்மிகு தாயார் 108 போற்றிகள் 4
3. காசினி போற்றும் கரையேறவிட்ட முதல்வன் - தமிழாகரர் தெ. முருகசாமி 6
4. வறுமைப்பதம் - புலவர் மு. இராசரத்தினம் 10
5. அருளிச்செயல்களில் பரசுராம அவதாரம் - பாச்சுடர் வளவ. துரையன் 13
6. வருவோர்க்கு வரம் தரும் அறுபடைவீட்டு அழகன் - இறை முருகன் 15
7. திருமந்திரம் தரும் திருமொழிகள் - பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன் 16
8. வேலும் மயிலும் துணை - பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதன் 21
9. திருமழிசை அருள்மிகு ஜெகந்நாதப் பெருமாள் மற்றும் திருமழிசைஆழ்வார் திருக்கோயில் 24
10. கந்தபுராண நுண் பொருள் - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் செஞ்சொல் உரைக்கோவை நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது 29
11. திருத்தாண்டக அருளிப்பாடுகள் - முனைவர் அ. அறிவொளி 32
12. அருணகிரியாரும் சூரபத்மனும் - குளித்தலை மாணிக்கப் பெருமாள் என்ற பாலா 34
13. திரு இரும்பூளை எனும் ஆலங்குடி திருத்தலம் 37

# அருள்மிகு தாயார் 108 போற்றிகள்



1. ஓம் அஞ்சிலைவல்லியே போற்றி
2. ஓம் அநந்தநாயகியே போற்றி
3. ஓம் அபிடேகவல்லியே போற்றி
4. ஓம் அம்புயவல்லியே போற்றி
5. ஓம் அமுதகடவல்லியே போற்றி
6. ஓம் அமுதவல்லியே போற்றி
7. ஓம் அரங்கநாயகியே போற்றி
8. ஓம் அரவிந்தவல்லியே போற்றி
9. ஓம் அரிலக்குமியே போற்றி

10. ஓம் அலர்மேல்மங்கையே போற்றி
11. ஓம் அழகியவல்லியே போற்றி
12. ஓம் அன்னநாயகியே போற்றி
13. ஓம் அன்னையே போற்றி
14. ஓம் ஆதிநாதவல்லியே போற்றி
15. ஓம் இந்திரையே போற்றி
16. ஓம் இலக்குமிநாச்சியே போற்றி
17. ஓம் இரமாமணியே போற்றி
18. ஓம் இறைவியே போற்றி
19. ஓம் உய்யவந்தவளே போற்றி
20. ஓம் உருப்பிணி நங்கையே போற்றி
21. ஓம் உலகநாயகியே போற்றி
22. ஓம் உறையூர்நாச்சியே போற்றி
23. ஓம் என்னைப்பெற்றதாயே போற்றி
24. ஓம் ஒண்டொடியாளே போற்றி
25. ஓம் கடல் மகளே போற்றி
26. ஓம் கண்ணபுரநாயகியே போற்றி
27. ஓம் கலியாணவல்லியே போற்றி
28. ஓம் கருந்தடங்கண்ணியே போற்றி
29. ஓம் கலைவாணியே போற்றி
30. ஓம் கற்பகவல்லியே போற்றி
31. ஓம் கனகவல்லியே போற்றி
32. ஓம் காடுறைவல்லியே போற்றி
33. ஓம் குலமாமகளே போற்றி
34. ஓம் குழைக்காதுவல்லியே போற்றி
35. ஓம் குழந்தைவல்லியே போற்றி
36. ஓம் குறுங்குடிவல்லியே போற்றி
37. ஓம் கோதைநாச்சியே போற்றி
38. ஓம் கோமளவல்லியே போற்றி
39. ஓம் கோளூர்வல்லியே போற்றி
40. ஓம் சண்பகவல்லியே போற்றி
41. ஓம் சத்தியபாமையே போற்றி
42. ஓம் சானகியே போற்றி
43. ஓம் சாரநாயகியே போற்றி
44. ஓம் சீதையே போற்றி
45. ஓம் சீவரமங்கையே போற்றி
46. ஓம் சுடர்க்கொடியே போற்றி
47. ஓம் சுந்தரவல்லியே போற்றி
48. ஓம் செங்கமலவல்லியே போற்றி
49. ஓம்செல்வத் திருக்கொழுந்தே போற்றி
50. ஓம் செல்வியே போற்றி
51. ஓம் சௌந்தரிய வல்லியே போற்றி
52. ஓம் தஞ்சைநாயகியே போற்றி
53. ஓம் தடங்கண்ணியே போற்றி
54. ஓம் தலைச்சங்கத் தமிழே போற்றி
55. ஓம் திங்கள் வினைதீர்த்த திருவே போற்றி
56. ஓம் திருமாமகளேபோற்றி
57. ஓம் திருவேபோற்றி
58. ஓம் தேவியே போற்றி
59. ஓம் நங்கையே போற்றி
60. ஓம் நப்பின்னையே போற்றி
61. ஓம் நம்பிக்கை நாச்சியே போற்றி
62. ஓம் நிலமங்கைவல்லியே போற்றி
63. ஓம் பங்கயச் செல்வியே போற்றி
64. ஓம் பத்மாசன நாச்சியே போற்றி
65. ஓம் பத்மாமணி நாச்சியே போற்றி
66. ஓம் பரிமளவல்லியே போற்றி
67. ஓம் பவளவல்லியே போற்றி
68. ஓம் பால்மொழியே போற்றி
69. ஓம் பாவையே போற்றி
70. ஓம் புருடோத்தமநாயகியே போற்றி
71. ஓம் புளிங்குடிவல்லியே போற்றி
72. ஓம் பூங்கோவல் நாச்சியே போற்றி
73. ஓம் பூமகளே போற்றி
74. ஓம் பூமிதேவியே போற்றி
75. ஓம் பூர்வா தேவியே போற்றி
76. ஓம் பூவார் திருமகள் நாச்சியே போற்றி
77. ஓம் பெண்கனியே போற்றி
78. ஓம் பெண்மைக் காப்பே போற்றி
79. ஓம் பெரிய பிராட்டியே போற்றி
80. ஓம் பெருஞ்செல்வ நாயகியேபோற்றி
81. ஓம் பெருந்தேவியே போற்றி
82. ஓம் பொற்கொடி நாச்சியே போற்றி
83. ஓம் பொற்றாமரையாளே போற்றி
84. ஓம் பொன்னே போற்றி
85. ஓம் மட்டவிழும் குழலியே போற்றி
86. ஓம் மடவரல்மங்கையேபோற்றி
87. ஓம் மண்மகளே போற்றி
88. ஓம் மதுரவேணியே போற்றி
89. ஓம் மரகதவல்லியே போற்றி
90. ஓம் மலர்க்கிழத்தியே போற்றி
91. ஓம் மலர்க்குழலியே போற்றி
92. ஓம் மாசறுமணியே போற்றி
93. ஓம் மாயா தேவியே போற்றி
94. ஓம் மிதிலைச் செல்வியே போற்றி
95. ஓம் மெல்லியலே போற்றி
96. ஓம் மென்னோக்கியே போற்றி
97. ஓம் மேகவல்லியே போற்றி
98. ஓம் மையகண்ணியே போற்றி
99. ஓம் மோகூர்வல்லியே போற்றி
100. ஓம் வகுளவல்லியே போற்றி
101. ஓம் வாசலக்குமியே போற்றி
102. ஓம் வேள்விப் பொருளே போற்றி
103. ஓம் விமலையே போற்றி
104. ஓம் வித்துவக்கோட்டு வல்லியே போற்றி
105. ஓம் வேதவல்லியே போற்றி
106. ஓம் வேளுக்கைவல்லியே போற்றி
107. ஓம் வைகுந்தவல்லியே போற்றி
108. ஓம் வைதேவியே போற்றி போற்றி.

நிறைவாக, அந்தந்த திருத்தலத்தற்குரிய தாயார் பாடலை ஓதி, போற்றியை நிறைவு செய்யலாம்.

# காசினி போற்றும் கரையேற விட்ட முதல்வன்



தமிழாகரர்
தெ.முருகசாமி

பாடல்பெற்ற நடுநாட்டுத் திருத்தலங்களுள் திருப்பாதிரிப்புலியூரும் ஒன்று. அருள்மிகு பெரிய நாயகி உடனாய பாடலீசர் வாழும் இவ்வூர், ஒரு காலத்தில் பாதிரி மரக் காடாக இருந்தது. இக்காட்டின் நடுவில் இறைவன், அம்மையப்பராய் சுயம்பாக வீற்றிருந்தான். இவனைத் தொழுது வணங்கிப் பேறுபெற முன்னைத் தவம் செய்திருக்க வேண்டும் என்பார், இத்திருத்தலத்தைப் பாடிய திருஞான சம்பந்தர். இக்கருத்திற்குச் சாப விமோசனமான கதை ஒன்று உண்டு.



புட்கர நகரத்தில் வாழ்ந்த மங்கணர் என்ற தவச் சீலர் காட்டில் திரியும் போது அங்கு அருந்தவம் புரிந்த தூமப்பர் என்னும் முனிவர் மீது தமது கால் தெரியாமல் பட்டுவிட்டதால் தவம் கலைந்த முனிவர் முயலின் கால்போல் முடமாகுக எனச் சபித்தார். ''இச்சாபம் நீ பாதிரிக்காட்டையடையும் போது நீங்கும்'' என்ற சாப நீக்கத்தையும் கூறக்கேட்ட மங்கணர் நாடுநகரம் சுற்றி இறுதியில் பாதிரிக் காட்டிற்குள் காலடி வைத்ததும் ஒரு நாயால் துரத்தப்பட்டார். இதனால் ஓடிய மங்கணர் பாதிரி மரத்தின் மீது மோதி உடல் உராய்ந்ததால் சாபம் நீங்கப் பெற்றார்.

இத்தகு தெய்வீகம் பொருந்திய பாதிரி மரத்தின் கீழே வீற்றிருந்த சுயம்பு மூர்த்தியைப் பால முனிவர் என்பவர் வழிபாடு செய்து வருகையில் பூயிட்டு வழிபட வேண்டும் என்பதற்காகப் பாதிரி மரத்தின் மேலேறிப் பூப்பறிப்பதற்கு வசதியாக ஆண்டவனை வேண்டிப் புலிக்கால் பெற்றார். இவ்வாறு பாதிரி மரங்கள் நிறைந்ததாலும் புலிக்கால் முனிவர் பூசித்ததாலும் இவ்வூர் பாதிரிப்புலியூர் ஆனது.

பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களுக்குத் திருநடனக்காட்சி தந்த இறைவன் வாழும் சிதம்பரம், தென்புலியூர் எனப்பட்டதால் இப்பாதிரிப் புலியூர், வடபுலியூர் எனப்பட்டது. உமையம்மை கன்னியாக வந்து அருவ வடிவில் அருந்தவம் செய்து பேறு பெற்றதால் இவ்வூரைக் கன்னிவனம் என்று திருப்பாதிரிப் புலியூரின் இலக்கியங்கள் கூறுகின்றன. இதற்கேற்ப பிறதலங்களில் இல்லாத பள்ளியறை நிகழ்ச்சி இத்திருத்தலத்தில் நடைபெறுகிறது. மற்ற தலங்களில் அர்த்தசாம பூசைக்குப் பின் சுவாமிதான் அம்மனின் பள்ளியறைக்கு எழுந்தருளுவார். ஆனால் இங்கே சுவாமி இருக்கும் பள்ளியறைக்கு அம்பாள் எழுந்தருளுவது, கன்னியான உமையாள் பேறு பெற்றதை நினைவூட்டுவதாக உள்ளது.

இத்திருத்தலம் கிழக்குக் கடற்கரைக்குச் சற்று மேற்கே நெய்தல் நிலப்பரப்பில் உள்ளதால் கடலூர் என்ற பெயரைத் தற்போது பெற்றிருந்தாலும் புலிநகக் கொன்றை என்னும் ஞாழல் மரங்கள் வளர்ந்துள்ளதால் ''கடைஞாழல்'' என்ற பெயர் பெற்று அப்பெயரே நாளடைவில் கடலூர் ஆனதாகக் கூறுவதும் உண்டு.

இத்தெய்வீகப் பழம் பெருமை மிக்க இந்நகரைத் தென் பாடலிபுத்திரம் என

வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். வடக்கே சோணையாற்றங்கரையில் இருந்த பாடலி புத்திரத்தை நந்தர்களும் மௌரியர்களும் ஆண்டுவந்தனர். அதுபோல இந்நகர், கடலில் கலக்கும் கெடில நதிக் கரையோரமாக இருப்பதால் தென்பாடலி எனப்பட்டது. மேலும் பழந்தமிழ்ச் சமயமான சைவம் அடங்கியிருந்து சமணம் செங்கோலோச்சிருந்த சிறப்பு திருநாவுக்கரசரது வரலாற்றால் உணரப் படுவதால் இந்நகரின் வரலாற்றுப் புகழையும் அறிய முடிகிறது.

திருப்பாதிரிப்புலியூருக்கு மேற்கே திருவாமூரில் தோன்றிய திலகவதியாரின் தம்பி மருள் நீக்கியார் என்பவர் இப்பாதிரிப் புலியூரிலிருந்த சமணப்பள்ளியில் சேர்ந்து தருமசேனர் என்ற பட்டம் பெற்றிருந்தார். தம்பி புறச் சமயம் சார்ந்ததற்காக வருந்திய திலகவதியார் சிவபெருமானிடம் விண்ணப்பித்த அளவில் சூலைநோயால் தருமசேனராம் தம்பி துன்புற்றார். நீங்க முடியாத துயரால் திருவதிகையில் வாழ்ந்த தமக்கையாரை வந்து கண்டு வணங்கியதும் அவரளித்த திருநீற்றால் திருநாவுக்கரசராய்ப் பெயர் பெற்றுச் சைவரானார். இந்நிகழ்வுகளைக் கேள்வியுற்ற பல்லவ வேந்தன் திருநாவுக்கரசரை வரவழைத்து அவருக்குப் பல இன்னல்களைக் கொடுத்தான்.



இறுதியாகக் கல்லில் கட்டிக் கடலில் போட்ட நிலையில் அவர் இறைத் திருவருளால் கல்லையே தெப்பமாகக் கொண்டு **''சொற்றுணை வேதியன்''** என்ற நமச்சிவாயப் பதிகம் பாடிய அளவில் திருப்பாதிரிப் புலியூர்க்குத் தெற்கே கரையேறினார். இக்கரையேறிய சிறப்பைச் சேக்கிழார்,

**''வாய்த்தசீர் வருணனே வாக்கின்**
**மன்னரைச்**
**சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட**
**எந்தியே கொண்டேழுந் தருளு வித்தனன்**
**பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்''.**

எனப் புகழ்ந்தார். திருப்பாதிரிப் புலியூர்ப் பாங்கரான கரையேறிய ஊரைச் சேக்கிழார் ''அத்திருப்பதியினில் அணைந்த அன்பரை'' எனக் கூறுவது நீள நினைந்து சிந்திக்கத் தக்கதாய் உள்ளது.

பதி என்றால் இடம். திருப்பதி என்றால் தெய்வம் தங்கியுள்ள இடம் என்பது பொருள். யாவர்க்கும் காணப்படாதிருந்த தெய்வம், திருநாவுக்கரசர் கரையேறிய அளவில் கண்ணாற் காணும் காட்சியாகத் தென்பட்டதால் அவர் கரையேறிய அச்சிற்றூர் திருப்பதியானது என்பது தான் தெய்வச் சேக்கிழாரின் திருவாக்கு. இதை உறுதிப்படுத்தும் விதமாகவே,

**"ஈன்றாளு மாய்எனக் கெந்தையு மாகிஎன**
**எடுத்துத்**
**தோன்றாத் துணையாய் இருந்தனன்**
**தன் அடியோங்கட் கென்று**
**..... தண்டமிழ் மாலைகள் சாத்தினரே"**
என்றார் சேக்கிழார்.

மங்கண முனிவராலும், புலிக்கால் முனிவராலும் புராணப் பெருமை பெற்ற பழம் புகழ் நகரத்தில் சைவ சமயம் அடங்கிக் கிடக்க சமணம் கோலோச்சிய நிலையில் அங்கு வாழ்ந்த தருமசேனராகிய திருநாவுக்கரசர் சிவனை நினைத்தாரில்லை. எந்த இடத்தில் எந்தப் பெருமானை வணங்க மறுத்தாரோ அதே இடத்தில் அதே பெருமானை வணங்குதற்குரிய காலமாக மாறி விட்ட தென்பது அவர் வாழ்வின் முரண்பாடாயினும் அம்முரண்பாடே சைவத்தின் மறுமலர்ச்சிக்கான வித்தாகி விட்டது என்பதே உண்மை. எனெனில் அவர் பாடிய ஈன்றாளுமாய் என்ற பாடலும் அதன் தொடர்ச்சியான பாடல்களும் சைவத்தைப் புதுப்பார்வையாகப் பார்க்கத் தூண்டின என்பதுதான் மானுடத்தின் மறுவாசிப்பான கடவுள் கொள்கையாகும்.

**"ஈன்றாளு மாய்எனக்கு எந்தையுமாய்**
**உடன்தோன் றினராய்**
**மூன்றாய் உலகம் படைத்துகந்தான்**
**மனத்துள் இருக்க**
**என்றான் இமையவர்க்கு அன்பன்**
**திருப்பா திரிப்புலியூர்த்**
**தோன்றா த்துணையாய் இருந்தனன்**
**தன்னடி யோங்களுக்கே."**

கரையேறிய அளவில் தன்கண்ணெதிரே



காட்சி தந்த இறைவனைத் தன் தாயாக தந்தையாக உடன்தோன்றியவராக நோக்குகிறார் திருநாவுக்கரசர். இங்ஙனம் காட்சி தந்த இறைவனைத் திருக்காட்சிநாதராகவே இன்றும் கரையேறிய பகுதியைச் சார்ந்த கிராமத்துக் கோயில்களில் உள்ள சிவலிங்க மூலவர்க்குப் பெயராக உள்ளது. இதை வடமொழிப் பெயராகத் தரிசினாம்பிகை சமேத திருக்காட்சிநாதர் என அம்மையை உடன்சேர்த்தும் வழங்குவதுண்டு.

இறைவனைத் தாயாக தந்தையாகப் பார்க்கும் பொதுப் பார்வைக்கு மேலாக உடன் தோன்றிவராய்ப் பார்க்கும் சிறப்புப் பார்வை சைவ உலகிற்குப் புதுமையாகும். எனக்கு உடன்தோன்றினராய் எனத் தன் தமக்கை திலகவதியாரை எண்ணியே பாடினாலும் பாடப்பட்ட தொடரின் இலக்கணக்குறிப்பை நோக்கும்போது அது பொதுமை உடையதாக இருப்பதை உணரலாம். எனக்கு உடன் தோன்றினளாய் என்றிருந்தால் அது திலகவதியாரையே குறிக்கும் எனலாம். தோன்றினராய் எனப் பலர்பால் பன்மையாகக் கூறியதால் உடன்பிறந்த தமக்கை தமையன், தம்பி தங்கை என எவரையும் சுட்டும் சொல்லாக அதைக் கருதலாம். தமக்கை என்றதால் மரியாதை கருதிய பன்மையாகக் கூறினார் எனக் கருதவாய்ப்புண்டு. ஆனால் தம்மை வாழ்வித்தது போல் பிற எவர்க்கேனும் தமக்கையாக அல்லாமல் தங்கையாக தம்பியாகக் கூட இருக்கவாய்ப்புண்டு என்பதால் பலர் பால் பன்மையாகக் கூறி அச்சொல்லைப் பொதுமைப் படுத்தினார் என்றே கூறுவது தகும். இப்பொதுமைப் பொருளால்தான் கடவுளை உடன் தோன்றியவராகப் பார்க்க முடியும். இல்லையேல் அது திருநாவுக்கரசருக்கு மட்டும் அமைந்ததாக ஆகி விடும்.

இச்சகோதரத்துவப் பொதுமைப் பண்பு தமிழ் நாட்டுக்கே உரிய ஒன்றாகும். யாதும் ஊரே யாவரும் கேளிர்! என்ற சங்க இலக்கியத் தொடர், தமிழ் மண்ணில் ஊறிப் போன சகோதரத்துவத்தை உணர்த்துவதாகும். சிறையிருந்தாளின் ஏற்றத்ததைக் கூறுவதாக வால்மீகி இராமாயணத்தைப் படைத்தாலும் அதையும் விஞ்சியதொரு கருத்தான சகோதரத்துவத்தை நிலைநாட்டும் பண்பிற்கு இராமாயணத்தைக் கம்பர் படைத்துக் காட்டுவ்து தமிழ்ப் பண்பைத் தேசியப் பண்பாக உயர்த்தவே ஆகும். இந்த அடிப்படை உணர்வை வெளிப்படுத்தும் விதமாகத் தமிழ் நாட்டிலிருந்து அமெரிக்க சிக்காக்கோவிற்கு அனுப்பப்பட்ட விவேகானந்தர் ‘சீமாட்டிகளே சீமான்களே’ எனக்கூறிய வழக்கத்திற்கு மாறாக, ’’சகோதரிகளே சகோதரர்களே’’ என விளித்துக் கூறினார் என்றால் அது தமிழ் தேசியத்தியத்தின் முத்திரையன்றோ!

திருநாவுக்கரசரின் வாழ்வில் அமைந்த தத்துவப் பொதுமை உலகிற்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே இதனைப் பெருவிழாவாகக் கரையேறிய ஊரைச் சார்ந்த மக்கள் கொண்டாட எண்ணினர். இதனால் சித்திரைத் திங்கள் சதய நட்சத்திரத்தன்று





சித்தியடைந்த திருநாவுக்கரசரின் திருநாளைக் கொண்டாடுவதற்கு முன்னால் அனுஷநட்சத்திர நாளைக் கரையேறிய நாளாகக் கொண்டாடும் நிலையில் கரையேறிய ஊருக்கு வடக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரிலிருந்து இறைவனும் இறைவியும் காளைவாகனத்தில் புறப்பட்டு அதிகாலை வேளையில் அவ்வூர்க்கு எழுந்தருளுவர். அங்ஙனம் எழுந்தருளுங்கால் அமர்ந்த கோலத்துடன் கூடிய அப்பர் பெருமானும் உடன்வர, அவ்வூரின் கரையேறிய பகுதியில் உள்ள திருக்குளத்தில் அப்பர் பெருமானைத் தெப்பத்தில் மிதக்கச் செய்து திருக்குளத்தைப் பத்து முறை சுற்றச் செய்கையில் சொற்றுணை வேதியன் பதிகம் பாடிக் கரையேறுவதான ஐதீகத்தை நடத்திக்காட்டுவர்.

அப்பர், கரையேறியதால் அவ்வூர் கரையேறவிட்ட குப்பம் என்றும் அவர் நடந்த சாலை அப்பர் சாலை என்றும் இன்றும் வழங்கப் பெறுகின்றன. இந்நிகழ்ச்சியைத் திருப்பாதிரிப் புலியூர் இலக்கியங்கள் கூறுகின்றன. 'புகழ் நாவேந்தைக் கரையேற விட்டபிரான்' என்கிறது திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம். **'நாவுக்கரசு நரலை அழுந்தாது எடுத்த சேவுக்கரசு'** என்கிறது திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், **''புலிசைமேவும் கரையேற விட்ட முதல்வா''** எனச் சிவஞான முனிவரின் தனிப்பாடல் கூறுகிறது. இக்கரையேறவிட்டக் குறிப்பென்பது அப்பருக்கு மட்டுமின்றிச் சைவமும் கரையேறிய தன்மையை உணர்த்துவதாகக் கொள்ளலாம். சமணக்கடலில் ஆழ்ந்திருந்தவர் சைவக் கரையேறாமல் இருந்திருந்தால் சைவம் குன்றியே போயிருக்கும். ஆதலால் உவர்க் கடலிலிருந்து அப்பர் கரையேறிய அளவிலேயே சைவமும் கரையேறியது எனலாம்.

இங்ஙனம் சைவம் கறையேறுவதற்குரிய இடமாகத் திருப்பாதிரிப்புலியூர் இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவே அப்பர் பாடிய திருப்பாதிரிப்புலியூர்த் தேவாரம், தமிழ்தேசிய சிறப்பைப் பெற்றது. தேயமெலாம் இக்கரையேறியதை மறக்காமல் நினைப்பதால் **''தேயமெலாம் நின்றிறைஞ்சும் திருப்பாதிரிப் புலியூர்''** என்றார் அப்பரடிகள். மேலும் இவ்வூர்த் தேவாரத்தில் உள்ள ''கருவாய்க் கிடந்து'' என்றும் **''புழுவாய்ப் பிறக்கினும்''** என்றும் பாடிய பாடல்கள் இரண்டையும் சைவ உலகம் மறக்காத படியாகப் பாடப்பட்டதால் பாதிரிப் புலியூரின் கரையேற்றிய நிகழ்ச்சி எங்கும் எவர்க்கும் மறக்க ஒண்ணாததாகும். இதனை அப்பூதிநாயனார் வரலாறு உறுதிப்படுத்தும்.

தண்ணீர்ப்பந்தலில் நும்பெயர் எழுதாமல் வேறொருபேர் எழுதக் காரணம் கேட்ட திருநாவுக்கரசரிடம் அப்பூதியார். **''பொங்கு கடல் கல் மிதப்பில் போந்தேறும் அவர் பெருமை அங்கணர் தம் புவனத்தில் அறியாதார் யாருளரே''** எனக் கூறுகிறார். இதனால் கல்லில் மிதந்து கரையேறிய செய்தி உலகப் பிரசித்தம் பெற்றது எனத் தெரிகிறது. எனவே அப்பரைக் கரையேற விட்ட விழாக் கொண்டாட்டம் என்பது, சைவம் கரையேறிய சிறப்பையும், கரையேறவிட்ட அளவில் தோன்றிய இறைவன் உடன்தோன்றியவராகக் காணப்பட்டதால் உலக சகோதரத்துவத்தை உணர்த்தும் சிறப்பையும் ஒருசேர உணர்த்துவதால் திருப்பாதிரிப்புலியூர் இறைவன் ''காசினி போற்றும் கரையேறவிட்ட முதல்வனே'' யாம் எனலாம்.

# வறுமைப் பதம்!

– புலவர் மு.இராசரத்தினம்

''**கொ**டிது கொடிது வறுமை கொடிது'' என்றாள் தமிழ் மூதாட்டி ஔவை.

வறுமையினும் கொடியது வறுமையே என்றார் வள்ளுவர். ''இன்மையுள் இன்மையே இன்னாதது'' என்பது குறள்.

**''நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பா டரிது''**

என்னும் குறளில் ஒருவன் நெருப்புடன் வேண்டுமானாலும் தூங்க முடியும். வறுமையுடன் ஒரு நாளும் தூங்க முடியாது என்று வறுமையின் கொடுமை பற்றி மேலும் கூறுகிறார் வள்ளுவர்.

இத்தகைய கொடிய வறுமையை செப்பரிய புகழ்க்குரிய சேக்கிழார் பெருமான் பதம் என்கிறார்.

ஆமாம் ''வறுமைப்பதம்'' என்கிறார்!




பதம் என்னும் சொல் அழகு, ஆடை, இன்பம், ஈரம், பக்குவம் என்னும் பல சிறந்த பொருள்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

இங்கே பதம் என்னும் சொல்லைப் பதவி என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளார் சேக்கிழார் பெருமான்,

வறுமையும் பதவி என்னும் சிறப்பைப் பெறுமா?

ஐயம் நமக்கு!

சேக்கிழார் வாக்கு தெய்வ வாக்கு, அது ஒரு நாளும் பொய்யாகாது!

எங்கே சொன்னார்? ஏன் சொன்னார்?

சிந்திக்கும் போது தான் அவர் சொன்னதன் சிறப்பும், பொருத்தமும் நமக்குப் புரிகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு அருகில் உள்ளது இளையான்குடி என்னும் ஊர். அவ்வூரில் வேளாளர் குலம் விளங்கவந்து பிறந்தவர் இளையான்குடி மாற நாயனார்.

செல்வச் செழிப்புமிக்க குடியில் பிறந்த மாறநாயனார் இளமையிலேயே இறைநாட்டம் மிக்கவராய்த் திகழ்ந்தார். இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தார்,

**''மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**

**அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்''**

என்பதற்கேற்ப சிவபெருமானுக்குச் செய்யும் தொண்டினும் சிவனடியார்கட்குச் செய்யும் தொண்டே சிறந்தது என்னும் கொள்கையராய் வாழ்ந்து வந்தார்.

எவரேனும் சிவனடியார்களைக் கண்டால் அவரைக் கைகுவித்து வணங்குவார். தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்வார். நன்னீரால் அவர் பாதங்களைக் கழுவுவார். ஆசனத்தில் அமர்த்தி வைத்து அர்ச்சனைகள் செய்வார். அவர்க்கு அறுசுவையுடன் கூடிய நால்வகை உணவளித்து உபசரித்து அக மிக மகிழ்வார்.

**''கொண்டு வந்து மனைப்பு குந்து**

**குலாவு பாதம் விளக்கியே**

**மண்டு காதலின் ஆசனத்திடை**

**வைத்த ருச்சனை செய்தபின்**

**உண்டி நாலு விதத்தில் ஆறு**

**சுவைத்தி றத்தினில் ஒப்பிலா**

**அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்**

**அமுது செய்ய அளித்துளார்.''**

என்னும் திருப்பாட்டில் இளையான்குடிமாற நாயனாரின் தொண்டின் சிறப்பை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

வளமையில் வாரி வழங்கும் ஒருவர் வளஞ்சுருங்கி வறுமை வந்த போது என்ன செய்வார்?

இதென்ன கேள்வி?

பிறர்க்குக் கொடுப்பதை நிறுத்துவார். உலக இயல்பு இதுதானே!

இருந்தால் தானே கொடுக்க முடியும்?

ஆனால் மாறநாயனார் வளஞ்சுருங்கிய போதும் மனம் சுருங்கினாரில்லை.

நாயனாரின் இத்தகு உயர்மாண்பை உலகிற்கு உணர்த்த விரும்பினார் தில்லைச் சிற்றம்பலவர். எனவே அவருக்கு வறுமையை உண்டு பண்ணினார்.

**''ஒல்லையில் வறுமைப்பதம் புக உன்னினார்**

**தில்லை மன்னினார்''**

எனக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

ஆக வறுமை இயற்கையாக வந்தது இல்லை!

செயற்கையாக வந்தது சிவபெருமான் தந்தது!

சோதனைகள் வந்த போது சோர்ந்து விடாது அவற்றைச் சாதனைகளாக மாற்றிக் காட்டுபவர்கள் தானே செயற்கரிய செய்யும் பெரியவர்கள், சரித்திரத்தில் நிலைத்து நிற்பவர்களும் அவர்கள்தானே!

வறுமை வந்து விட்டது. நாயனார் என்ன செய்தார்?

பண்ட பாத்திரங்களை விற்றார்

அணிமணிகளை விற்றார்

நிலபுலங்களையும் விற்றார்

தாம் பட்டினி கிடந்த போதும் அடியார்க்கு அமுதளிக்கும் அறம் தடைபடாது ஆற்றி வந்தார்.

வறுமையை உண்டாக்கிய வள்ளலாராம் சிவபெருமான் ஒரு நாள் காளைவாகனமும் இன்றி உடனுறை உமையவளும் இன்றித் தனியே தவவேடராய் நாயனார் இல்லம் வந்து சேர்ந்தார். அவர் வந்த காலமோ நல்ல மழைக்காலம். வந்த நேரமோ நடு இரவு கும்மிருட்டு.

நாயனாரும் அவர்தம் மனைவியாரும் தங்கட்கே உண்ண உணவின்றிப் பட்டினியாய்ப் படுத்திருக்கும் நிலை.

இந்த நிலையிலும் சிவனடியார் ஒருவர் வந்திருக்கிறார் என்பதை அறிந்த நாயனார் ஓடோடி வந்தார். அவரை வணங்கி வரவேற்றார். அவரது ஈரமேனியைத் துடைத்தார். ஓரிடத்தே அமரவைத்தார்.

''தவ வேடத்தர் மிகுந்த பசியுடன் வந்துள்ளார். அவர் பசிபோக்கும் வழியாது? என்று மனைவியாரைப் பார்த்துக் கேட்டார்.

நாயனாரின் மனைவியார்,

**''காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன்**

**காரியம் யாவினும் கைகொடுத்து**

**மாதர் அறங்கள் மாட்சியுறச் செய்து**

**வாழும் மாண்பினர்.''**

இந்த நேரத்தில் இந்த நிலையில் விருந்தினர் ஒருவரா? அவர்க்கு நாம் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்கவில்லை அம்மையார்.

மழைக்காலம் இரவு நேரம் அண்டை வீட்டாரிடமும் கேட்க இயலாது. வேண்டுமானால் ஒன்று செய்யலாம். இன்று பகல் நம் வயலில் விதைத்த நெல் முளைகள் மழைக்கு ஓரமாக ஒதுங்கி இருக்கும். அவற்றை வாரிக்கொண்டு வந்தால் உரிய முறையில் அமுது ஆக்கலாம். இது தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை" என்றார்.

அடியவர்க்கு அமுதளிக்க அரிய வழி சொன்ன மனைவியார் மதிநுட்பம் நினைந்து பெருஞ்செல்வம் பெற்றவர் போல் உள்ளம் மிக மகிழ்ந்தார் நாயனார்.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுண்டா?

கொட்டும் மழை, தரை எது? தண்ணீர் எது? என்று தெரியாத காரிருள்.

ஒரு கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு காலினால் தடவியபடி தன் நிலத்துக்குப் போனார். மழைநீரால் ஒதுங்கியிருந்த நெல் முளைகளைக் கைகளால்

வாரிக் கூடையில் நிரப்பிக் கொண்டு வந்தார்.

நள்ளிரவு நேரத்திலும் அடுத்தவர் வயல் நெல்லைத் தொடாது தட்டுத்தடுமாறித் தன் வயலைத் தேடிச் சென்று நெல் முளைகளை வாரிக்கொண்டு வந்த நாயனார்தம் மாண்பு நினைந்து போற்றுதற்கு உரியது.




சேறு படிந்த நெல் முளைகளைக் கழுவிச் சுத்தம் செய்த நாயனாரின் மனைவியார் ''அடுப்பெரிக்க விறகு இல்லையே!'' என்றார்.

இதைக் கேட்ட மாற நாயனார் சற்றும் தாமதியாது கோடரியால் வீட்டுக் கூரையின் ஒரு பகுதியை வெட்டி வீழ்த்தினார்.

அம்மையார் அடுப்பை மூட்டினார். நெல்லைப் பக்குவமாக வறுத்து எடுத்தார். குத்தி அரிசியாக்கினார். உலையிலிட்டு அமுதும் ஆக்கினார். பின் ''கறிக்கினி என் செய்கோம்'' என இறைஞ்சி நின்றார்.

தவவேடத்தார் மிக்க பசியினால் வாடியிருப்பாரே அவருக்கு அமுது படைக்கக் காலதாமதம் ஆகிறதே என்று வருந்தினார் நாயனார்.

விரைந்து கொல்லைப்புறம் சென்றார். குழிக்கு மேல் வளராத பயிர் இலைகளைக் கைகளினால் தடவிப் பறித்தார்.

நாயனார் புன்செய்க்குறும் பயிர்களையா பறித்தார்? இல்லை! தம் பாசப் பழி முதலையே பறித்தாராம்.

ஆமாம்! சேக்கிழார் பெருமான் அப்படித்தான் கூறுகிறார்.

**''குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்**

**பழிமுதல் பறிப்பார் போலப் பறித்து கறிக்கலை நல்க''**

என்பது அவர்தம் கூற்று.

என்னே! சேக்கிழார் பெருமானின் தத்துவ வித்தகம்.

ஒரே வகைக்கீரை. அதுவும் குழிநிரம்பாத கீரை. அதையே வேறு வேறு வண்ணங்களில் வேறு வேறு சுவைகளில் சமைத்தாராம் நாயனாரின் மனைவியார்.

சமையற் கலையின் நுட்பம் தெரிந்தவர் நாயனாரின் மனைவியாரா? அல்லது சேக்கிழார் பெருமானா? யாரைப் பாராட்டுவது.

நாயனார் துயின்று கொண்டிருந்த தவவேடத்தவரிடம் சென்று ''பெரியோம் அமுது செய்து அருள்க'' என்று எழுப்பினார்.

தவவேடத்தராய் வந்த மாலும் அயனும் காணா மலரடியான் அங்கே சோதிவடிவாய்த் தோன்றினார். அதுகண்ட நாயனாரும் அவர்தம் மனைவியாரும் திகைத்து நின்றனர்.

இப்போது, தன்னந்தனியே தவவேடத் தராய் வந்த பெருமான் உமையொரு பாகனாய், காளை வாகனனாய் இருவருக்கும் காட்சி தந்தான்.

அன்பனே! ''அடியவர்க்கு அமுதளிக்கும் அருந் தொண்டினை அயராது செய்து வந்த நீ நின் துணைவியுடன் நமது சிவலோகம் வருவாயாக''

''அங்கு செல்வத்திற்குத் தலைவனாகிய குபேரன் உனக்குப் பணிவிடை செய்ய நம்திருவடி நிழலில் என்றும் இன்புற்று இருப்பாயாக'' என்று அருள் செய்து மறைந்தார்.

தவவேடராய் சிவபரம்பொருள் வந்தபோது நடுஇரவு நல்ல மழைக்காலம். அமுதுக்கு அரிசியில்லை. அடுப்பெரிக்க விறகில்லை. கறிக்கு எதுவும் இல்லை.

இந்த நிலையிலும் ஓர் இரவுக்குள் இத்தனையும் தேடிக் கொணர்ந்து அடியவர்க்கு அமுதாக்கினார் மாற நாயனாரும் அவர்தம் மனைவியாரும்.

செயற்கரும் இந்தச் செயல்தான் அவர்கட்கு பெறுதற்கரிய பெரும் பேறாம் சிவபதத்தைப் பெற்றுத் தந்தது.

இந்த வறுமையைச் சேக்கிழார் பெருமான் ''வறுமைப்பதம்'' எனச் சிறப்பித்துச் சொல்லியது மிக மிகப் பொருத்தமாய் அமைந்து கற்போர் நெஞ்சைக் களிப்புறச் செய்கிறதல்லவா?

# அருளிச் செயல்களில் பரசுராம அவதாரம்

- பாச்சுடர் வளவ. துரையன். எம்.ஏ.,பி.எட்.,



திருமங்கையாழ்வார் கண்வமுனிவருக்குக் காட்சி தந்து திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி உள்ள சௌரிராஜப் பெருமாளையே பரசுராமராகப் பார்க்கிறார். திருக்கண்ணபுரமே பரசுராமரின் இருப்பிடம். திருமகள் பொருந்தியுள்ள செழுமையான தாமரை மலரிலே தேனைப் பருக இழிந்த வண்டுகள் இசைப்பாடல்களைப் பாடி கலந்திருக்கப் பெற்ற திவ்ய தேசம் அது என்றும் சாதிக்கிறார்.

**''மழுவியல் படையுடை யவனிடம் மழைமுகில்**
**தழுவிய உருவினர்- திருமகள் மருவிய**
**கொழுவிய செழுமலர் முழுசிய பறவைபண்**
**எழுவிய கணபுரம் - அடிகள்தம் இடமே''**
*(8-7-6)*

மேலும் திருக்கண்ணபுர திவ்ய தேசத்தின் அழகை மங்கை மன்னன் அருளிச் செய்யும் போது.

**''குடியா வண்டு கொண்டுண்ணக்**
**கோல நீலம் மட்டுகுக்கும்**
**கடியார் புறவில் கண்ணபுரத்து**
**அடியேன் கண்டு கொண்டேனே'' (8-8-6)**
என்கிறார்.

வண்டுகள் குடும்பமாகத் தேனை எடுத்துப் பருகும் மணம்மிக்க சோலைகளை உடைய திருக்கண்ணபுரமாம் அது. அங்குதான் கூர்மை பொருந்திய வாயை உடைய கோடரியையே ஆயுதமாகக் கொண்டு பரசுராமராய்த்திருஅவதரித்து இருபத்தோரு தலைமுறை அரசர்களைத் தொலைத்த பெருமாளைக் கண்டேன் என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

**''வடிவாய் மழுவே படையாக**
**வந்து தோன்றி மூவெழுகால்**
**படியார் அரசு களைகட்ட**
**பாழியானை அம்மானை''** என்பது அவர் அருளிச்செயலாகும்.

இராமாவதாரத்தில் பெரிதும் ஈடுபட்டு நெஞ்சைப் பறிகொடுத்தவர் குலசேகரப் பெருமாள். அவர் இராமனின் பெருமையைக் கூறும் போது

**''முன்னொருநாள் மழுவாளி சிலை வாங்கி**
**அவன் தவத்தை முற்றும் செற்றாய் (9-9)**
என்றும்

**செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்**
**சினவிடையோன் சிலையிறுத்து, மழுவா ளேந்தி**
**செவ்வரி நற்சிலை வாங்கி, வென்றி கொண்டு''** *(10-3)*

என்று பரசுராம அவதாரத்தைப் பாடுகிறார்.

சீதா பிராட்டியை மணம் முடிக்க மிதிலையில் வில் வளைத்துப் பின் மணம் முடித்துத் திரும்புகையில் மழுவேந்தி எதிர் வந்த பரசுராமரின் தவவலிமையை இராமபிரான் கொண்ட சரிதத்தை இவ்வாறு குலசேகராழ்வார் அருளிச்செய்கிறார்.

ஆயிரம் தோள்களை உடைய கார்த்தவீரியார்ச்சுனனைப் பரசுராமர் வெற்றி கொண்டதை திருமங்கையாழ்வார் பாடுகிறார். திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள பெருமாளை மங்கை மன்னன் பாடும் போது. கார்த்த வீரியனுடைய ஆயிரந்தோள்களும் ஆயிரம் மலைகள் சேர்ந்தது போலவும் போருக்குத் தகுதியானவை யாகவும் அழகுமிக்கனவாகவும் இருந்தன. அவற்றை மழுப்படையைக் கையில் கொண்டு அறுத்துத்தள்ளி அந்தக் கார்த்த வீரியனை வீர சொர்க்கம் அடையச் செய்தார் எம் பெருமான். பின்னர் தேவர்கள் ஆயிரம் திருநாமங்களைச் சொல்லித் துதிக்கக் கடல் நடுவே ஆயிரம் முகங்களை உடைய ஆதிசேடனாகிற படுக்கையிலே யோக நித்திரை செய்யும் பெருமாள் திருவரங்கத்திலே பள்ளி

கொண்டிருக்கிறார் என்று சாதிக்கிறார்.

''ஆயிரம் குன்றம் சென்றுதொக் கனைய
அடல்புரை யெழில் திகழ் திரள்தோள்
ஆயிரந் துணிய அடல்மழுப் பற்றி
மற்றவன் அகல்விசும் பணைய
ஆயிரம் பெயரால் அமரர்சென் றிறைஞ்ச
அறிதுயில் அலைகடல் நடுவே
ஆயிரம் சுடர்வாய் அரவணைத் துயின்றான்
அரங்கமா நகர் அமர்ந் தானே'' (5-7-6)

என்பது அவர் அருளிச்செயலாகும்.

திருமங்கையாழ்வார் திரு இலச்சினை பெற்ற திவ்யதேசம் திருநறையூர் ஆகும். வேதத்தில் சிறந்தவைகளான புருஷசுக்தம் முதலிய பாகங்களை வாயிலே உடையவனாக, எட்டுத்தோள்களை உடைய சிவ பெருமானுக்கு எழுபது ஆலயங்களை அமைத்து உலகையாண்ட உயர்ந்த குலத்தில் பிறந்த செல்வம்மிக்க சோழன் சேர்ந்த கோயில்தான் திருநறையூர் மணி மாடம் என்கிறார் மங்கை மன்னன்.

நப்பின்னையின் நாயகனும் முன்பொருகாலத்தில் போர்க்களத்தில் மாற்றரசனாகிய கார்த்த வீரியார்ச்சுனனுடைய மிடுக்கு அழியும் படியாக அவனது தலையைத் துணித்தவனும் ஆகிய பெருமானுடைய திருவடிகளை அடையும் விருப்பம் உடையவர்கள் திருநறையூர் சென்று சேருங்கள் என்று அருள்கிறார் மங்கை மன்னன்.

''முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரந்துணித்தான் திருவடி நும் சென்னி வைப்பீர்!
இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே''

(6-6-8) என்பது அவர் பாசுரம்.

கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்டு அனுபவிக்கும் திருமங்கை ஆழ்வார் பரசுராம அவதாரத்தின் மேன்மையையும் எடுத்தியம்புகிறார். ஆயர்பாடியில் இதோ தயிர் வெண்ணெய் திருடி உண்டு ஆய்ச்சியரால் கட்டுண்டு நிற்பவன் யார் தெரியுமா? அவன்தான் பெரிய ஆரவாரத்தை முன்பு செய்து கொண்டு மார்புதட்டிக் கிளர்ந்து போர்புரிய எதிரே வந்து நின்ற கார்த்த வீரியன் என்னும் அரசனுடைய கோபத்துடிப்பு கொண்ட ஆயிரம் தோள்களையும் மழுப்படையால் துணித்த பரசுராமன். அதோடு சிற்றின்பமாகிய அற்பப் பலன்களை முற்றிலும் விட்டுவிட்டு திருவடிகளில் விழுந்து துதிக்க வல்லவர்களுடைய துன்பங்களை எல்லாம் கழித்தருளி அவர்களைத் தனக்கு நித்திய அடியார்களாகச் செய்து கொள்ள வல்ல சுவாமியாய்த் திகழ்பவரும் அவரே என்று பெருமாளின் பெருமையை திருமங்கை யாழ்வார்கூறுகிறார்.

''பழித்திட்ட இன்பப் பயன்பற் றறுத்துப்
பணிந்தேத்த வல்லார்துயராய எல்லாம்
ஒழித்திட் டவரைத் தனக்காக்க வல்ல
பெருமான், திருமால், அதுவன்றியும்முன்,
தெழித்திட் டெழுந்தே எதிர்நின்ற மன்னன்
சினத்தோள் அவையா யிரமும் மழுவாய்
அழித்திட் டவன்காண் மின் - இன்றாய்ச் சியரால்
அளைவெண் ணெய்உண் டாப்புண்டி ருந்தவனே''

(10-6-6)என்பது அவர்தம் அருளிச் செயலாகும்.



# வருவோர்க்கு வரம் தரும் அறுபடைவீட்டு அழகன்



இறைமுருகன்





அம்மை அப்பனைச்சுற்றி அஞ்ஞானப்
பழமதை
தம்மின் மூத்தோன் பெற்றனன்- அம்மட்டு
ஆண்டிக் கோலமுடன் அப்பழநி
மலைநின்றனன்
வேண்டி வருவோர்க்கு வரம்தந்தனன்.

சூரனை வதைத்து செந்தூர்க் கடலோரம்
காரண மாகிநின்ற கந்தன் - தாரக
மந்திரம் தந்திடும் செல்வன் வேலவன்
வந்தனம். வருவோர்க்கு வரம்தந்தனன்.





தென்பரங் குன்றமதில் தெய்வானைக்
கரத்தினை
அன்புடன் பற்றிய அழகனவன்- என்பும்
உருகிட அவனருள் உண்டென நம்பியே
வருகை தருவோர்க்கு வரம் தந்தனன்

ஓமெனும் திருநாமம் ஓதிய செல்வன்
ஆமென அச்சிவன் கேட்டனன்- நாமென
சுவாமி மலையேறு சுந்தரமுகனைத்
தொழுதிட
அவாவிட வருவோர்க்கு வரம் தந்தனன்.

திருத்தணி யதிலே தேவி வள்ளியினை
திருமணம் செய்த தேவனவன்- திருப்பெயர்
முழவியே காவடி மென்தோள் ஏந்தியே
அழகிட வருவோர்க்கு வரம் தந்தனன்

பழமுதிர் சோலையிலே பக்கமிரு தேவியர்
அழகுடன் அக்காட்சி தந்தனன்- கழகம்
தமிழதன் தலைவன் தரணியில் இவனடி
தமின்நாட வருவோர்க்கு வரம்தந்தனன்.



# திருமந்திரம் தரும் மந்திர மொழிகள்



பேராசிரியர் முனைவர் ச.கணபதி ராமன்

தமிழ்நாட்டில் தொன்று தொட்டக் காலத்திலிருந்து எத்தனையோ சித்தர்கள் பலர் தோன்றினர். அவர்களுள் 18 சித்தர்களை சிறப்பாக குறிப்பிடுவார்கள். 18 சித்தர்களுள் முதன்மையும் பெருமையும் வாய்ந்தவர் திருமூலர் என்று கூறுவார்கள். திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் ஆண்டிற்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடினார் என்றும் அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இவர் பாடிய நூல் திருமந்திரம் எனப்படும்.

**திருமூலர் வரலாறு**

கைலை மலையில் நந்தியம் பெருமான் அருள் பெற்ற சுந்தரநாதன் என்ற சித்தன் பொதிகை மலையில் வாழும் அகத்தியரைக் கண்டு வணங்கத் தென் திசைக்கு வந்தார். பல தலங்களை கடந்து வந்த சுந்தரநாதன் திருவாவடுதுறையில் இறைவனை வணங்கி புறப்படும் போது காவிரிக் கரையில் வீழ்ந்து கிடந்த மனிதனைச் சுற்றிப் பசுக்கள் கண்ணீர் விடுவதைக் கண்டார். தங்களை மேய்த்துவந்த தலைவன் இறந்து விட்டான் என்று அறிந்து பசுக்கள் கண்ணீர் விடுகின்றன என்பதை உணர்ந்தார் சுந்தரநாதன். உணர்ந்து தமது உடலை ஒரு இடத்தில் மறைத்து வைத்து இறந்து கிடந்தவன் உடலில் பாய்ந்தார். வீழ்ந்து கிடந்தவன் எழுந்தான். பசுக்கள் மகிழ்ந்தன. அவை மாலையில் வீடு திரும்பின. வீழ்ந்து கிடந்த மூலனின் மனைவி தன் கணவன் வீட்டிற்குள் வராமல் ஒதுங்கி நிற்பதை அறிந்து வீட்டிற்குள் அழைத்தாள். அவர் வரவில்லை. ஊரையும் உறவையும் கூட்டினாள். அவர்கள் வந்து இவரை பார்த்தவுடன், உன் கணவர் சித்தர் நிலையை அடைந்து விட்டார் என்று கூறிச் சென்று விட்டனர். மனைவியும் வேதனையோடு திரும்பினாள். அவர், தாம் மறைத்து வைத்த உடலைத் தேடினார். அது கிடைக்கவில்லை. ஆகவே மூலன் உடலிலேயே வாழ்ந்த இவர் மூலன் என்ற பெயர் பெற்றுப் பின்னர் திருமூலர் என்ற திருப்பெயரைத் தாங்கினார்.

**பிறந்த நோக்கம்**

திருமூலர் உலகில் பிறந்த நோக்கத்தை தமது திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார். என்னை இறைவன் நன்றாக படைத்தான். தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே என்கிறார். ஆகமங்களையும் மறைகளையும் தமிழ்ப்படுத்தி மக்களுக்கு வழங்கிடவே இறைவன் என்னைப் படைத்தான் என்று திருமூலர் குறிப்பிடுகிறார். ஆகமங்களைத் தமிழ்ப்படுத்திய நூலே திருமந்திரம்.

திருமந்திரத்தில் வரும் மூவாயிரம் பாடல்களும் ஒன்பது அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. மந்திர மொழிகளைப் பேசும் பகுதிகளும். மக்களுக்கு அறிவுரையாகக் கூறும் பகுதிகளும், யோகசித்தி நிலைகளையும், இறைவனை, தேவியை வழிபடுகின்ற முறைகளையும், இந்நூல் எடுத்து இயம்புகிறது.

இறைவனை அறிவதற்குக் கல்வி அடிப்படையானது என்ற கருத்தை விளக்கிட கல்வி பற்றியும் திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார்.

**கல்வி**

திருமூலர் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, நல்குரவு, கொல்லாமை, அன்புடைமை ஆகியவற்றை பற்றிக் குறிப்பிடினும் திருவள்ளுவரைப் போல கல்வி பற்றியும் கல்விக்கு தொடர்புடைய கேள்விக்கேட்டல் பற்றியும், கல்லாமை பற்றியும் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார். கல்வியே இறைவனை அறிகின்ற அறிவை வளர்க்கும் என்றும், ஒருவனுக்கு உற்ற துணை அதுவே என்றும், உள்ளத்தில் அது உள்ளொளியை பெருக்கும் என்றும், நமக்குத் துணையாக அது வரும் என்றும் திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். அது

''துணையாவது வாய்வருந் தூயநற் சோதி

துணையாவது வாய்வருந் தூயநற் செல்லாந்

துணையாவது வாய்வருந் தூயநற் கந்தந்

துணையாவது வாய்வருந் தூயநற் கல்வியே''

என்பதாம்.

வழித்துணையாய், மருந்தாய், இம்மை மறுமைக்கு உற்றத் துணையாய், கல்வி

அமையும். அது விழுப்பத்தையும், ஒழுக்கத்தையும் வழங்கிடும் என்கிறார் திருமூலர்.

''கல்வி கற்காத மூடரைக் காணவும் ஆகாது

கல்லாத மூடர்சொல் கேட்கவும் கடனன்று

கல்லாத மூடர்க்கு கல்லாதார் நல்லராம்

கல்லாத மூடர் கருத்தறியாரே''

என்று கல்வி கற்காத மூடர்களை இழித்துக் கூறுகிறார் திருமூலர்.

**குருவைத் தேடு**

கல்வி கற்றிடத் தெளிந்த குருவைத் தேட வேண்டும். தெளிவில்லாத குரு தரும் கல்வி, உண்மைக் கல்வியாகாது. தெளிவில்லாத குருவும் கல்வியில்லாத குருடரே என்கிறது திருமந்திரம். இதனை,

''குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்

குருட்டினை நீக்காக் குருவினை கொள்வார்

குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்

குருடுங் குருடுங்குழி விழுமாறே''

என்ற பகுதியால் அறியலாம்

**மறைபொருள்**

திருமந்திரம், மெய்ப்பொருள் கருத்துக்களை மறைபொருள் சொற்களால் விளக்குவதை அனைவரும் அறிவர். வெளிப் பார்வையில், வெள்ளிய சொற்களாகவும், உள்ளிய உணர்வில் அவை உறுபொருள்தரும் சொற்களாகவும் அமையும். எடுத்துக்காட்டாக ஒன்றைக் காணலாம்.

''வழுதலை வித்திட பாகல் முளைத்தது

புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது

தொழுது கொண்டூஓடின தோட்டத்துக் குடிகள்

முழுதும் பழுத்தது வாழைக் கனியே''

வழுதலை என்பது கத்தரிக்காய். கத்திரிக்காய் உலகம் போன்று வட்ட வடிவமானது. கத்திரிக்காயில் உள்ள காம்பில் ஐந்து பிரிவுகள் இருக்கும். கத்திரிக்காய் காம்பு சிவத்தைக் குறிக்கும். காம்பிலுள்ள ஐந்து தோடுகள் நிலம், நீர், வாயு, வானம், நெருப்பு என்ற பஞ்சபூதங்களைக் குறிக்கும். உருண்டை வடிவான கத்திரிக்காய் போன்ற உலகம் இறைவனது ஆணையால் பஞ்சபூதங்களோடு சேர்ந்து கத்திரிக்காய் விதைகள் போன்றிருக்கும் உயிர்களுக்கும், உய்வைக் கொடுக்கும்.

எளிமையில் கிடைக்கும் காய் கத்தரிக்காய் அனைத்து, கறிகளுடனும் சேரத் தகுதியுடைய காய் கத்தரிக்காய். இறைவனும் காட்சிக்கு எளியவன். அவனுக்கு இன்னார் இனியார் என்ற பாகுபாடு கிடையாது. அனைவரும் அவனது பிள்ளைகளே.

பாகல் முளைத்தது என்பது வைராக்கியமான உறுதியைக் குறிக்கும். பாகல் கசப்புச் சுவையுடையது. கசப்பை உண்டிட உறுதி வேண்டும். இறைவனைத் தேடிட மன உறுதி வேண்டும். பாகல் கசந்தாலும் உடலுக்கு நன்மையினையே தந்திடும். இறைவனைத் தேடிட உறுதி ஏற்படின், இறுதியில் அது நலத்தையே பயக்கும்.

புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது. இறைவனை நாடிட, தத்துவக் கல்வியினைக் கற்றிட வேண்டும். தத்துவக் கல்வியில் ஈடுபாடு கொண்டு, இறைவனை நாட வேண்டும். ''புழுதி'' பெரும் பாலும் மஞ்சள் நிறம் கொண்டிருக்கும். காடுடைய சுடலைப் பொடி பூசிய இறைவனை எய்திட, தத்துவ விசாரணை கொள்ள வேண்டும். தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போல், புழுதியைத் தோண்டத் தோண்ட இறை நிலையினை எய்திட முடியும். பூசணி என்பது சக்தியைக் குறிப்பது. பூசணி மஞ்சள் நிறம் கொண்டது. 9 கீற்றுக்களையும் கொண்டது. சிறிய பெரிய பூசணியில் 9 கீற்றுக்கள் இருக்கும். இந்த ஒன்பது கீற்றுக்களும், நவசக்திகளைக் குறிப்பதாகும். சக்திக்கு மஞ்சள் வண்ணம் உகந்தது. புழுதியைத் தோண்டி நவசக்திகளான பூசணியைக் கண்டேன், பூசணியைக் கண்டதும் உடம்பாகிய தோட்டத்திலிருக்கும் ஐவரும் எம்மை வணங்கிவிட்டு ஓடிவிட்டனர். தோட்டத்துக் காவற்காரர்களாகிய ஐம்புலன்களையும் அடக்கிய பின்னர் முழுதும் பழுத்தது வாழைக்கனியே. தோலை உரித்து அப்படியே அதனை உண்ணலாம். மா, பலா,வாழை ஆகியவற்றில் எளிதில் கிடைப்பது வாழைக்கனியே. தோலை உரித்து அப்படியே அதனை உண்ணலாம். மா, பலா போன்று சிறிது கடினமுள்ள கனி அல்ல, வாழைக்கனி. வாழைக்கனியை குழவிமுதல் கிழவி வரை உண்ணலாம். மற்ற இரு கனிகளையும், குழவியும், கிழவியும் உண்பாராகில் மாந்தம் (செரிமானம் இன்மை) ஏற்பட்டு இடர்ப்படுவர்.

இத்துணை பொருளையும் உள்ளடக்கியது அப்பாடல்.



உடம்பைப் பேணுக

மறைப்பொருள் கூற்றுக்களை மக்களுக்கு உணர்த்தி மக்களை வாழ்விக்க வழிகாட்டும் திருமூலர் உள்ளத்தையும் உடம்பையும் பேணும் முறையினையும் விளக்குகிறார். மனம் செம்மையுடன் அமைய உடம்பு வளம் பெற்றிருக்க வேண்டும். நோயுள்ள உடம்பு நோற்பதற்கு தகுதியற்றது. அது நோயைத்தான் எண்ணுமேயன்றி நோய் நீக்கும் தன்மையைக் கருத்தில் கொள்ளாது. எனவே உடம்பினைப் பேண வேண்டும். உடம்பிற்கு மெய் என்ற பெயருண்டு. மெய்யினுள் மென்மைப் பொருளைக் காண முடியும். மெய்யில் உயிர் உறையும். உயிரின் உறைவிடமே மெய் தான். இந்த உடம்பிற்குள் உத்தமன் கோயில் கொண்டிருப்பான். உத்தமன் கோயில் கொள்ளும் இடம், தூயதாக, நோயில்லாததாக அமைய வேண்டுமன்றோ? எனவே உடம்பை பேணு, என்கிறார் திருமூலர். இதனைத் திருமந்திரம்.

''உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்

உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்

உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று

உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே''

என்று குறிப்பிடுகிறது.

யோகப் பயிற்சி

உடம்பைப் பேணி வளத்திட யோகப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்கிறார் திருமூலர். மூச்சைஇழுத்து விடும் பயிற்சியால் உடல் தூய்மையுறும். மூச்சைஇழுத்து விடும் பயிற்சியால் வாத பித்த கப தொல்லைகள் நீங்கிவிடும். இத்தொல்லைகள் நீங்கிடின் உடல் நலம் பெறும். ''வாத பித்த கப'' தொல்லைகள் நீங்கும் நிலையினைத் திருமூலர்.

''அஞ்சனம் போன்று உடல் ஐயறு மந்தியில்

வஞ்சகவாதம் அறும் மத்தியானத்திற்

செஞ்சிறு காலையில் செய்திடிற்பித்தறும்

நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே''

காலையில் செய்யும் மூச்சுப் பயிற்சியில் பித்தம் நீங்கி விடும். நடுப்பகலில் செய்யும் மூச்சுப் பயிற்சியால் வாதம் நீங்கிவிடும். மாலையில் செய்யும் மூச்சுப் பயிற்சியால் கபம் (கோழை-சளி) நீங்கிவிடும். அவற்றுடன் நரை திரை (சுருக்கம்-முதுமைக் கீற்றுக்கள்) ஆகியவையும் அகன்று விடும். என்பது மேற்கண்ட திருமந்திரத்தின் பொருள்.

உள்ளம் பெருங்கோயில்

மூச்சுப் பயிற்சியால், உடலைப் பேணிடின் உள்ளம் பெருங்கோயிலாகி விடும்.

''உள்ளமே பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'' என்பது திருமந்திரம்.

உள்ளத்தில் இறைவனை எழுந்தருளுவித்து, உள்ளத்திற்குள்ளே வழிபாடு செய்யலாம்.

பூசலநாயனார் என்ற நாயனார் உள்ளத்திற்குள்ளே கோயில் கட்டி, அக்கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்து, குடமுழுக்கும் செய்து, நாள்வழி பாடும் செய்து வந்தார். பல்லவமன்னன் காட்வர்கோன் கழற்சிங்கன் கட்டிய கோயிலைவிட. பூசலார் உள்ளத்தில் கட்டிய கோயிலைச் சிறப்புடையது எனக்கொண்டு. குடமுழுக்கு நாளுக்கு பூசலார் கட்டிய கோயிலுக்கு. முதன்முதலில் எழுந்தருளினார் என்று பெரிய புராணத்தால் அறிய முடிகிறது.

யாவர்க்கும் எளியது

அத்துணை சிறப்புடைய உள்ளக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபடுவது எளிதாகும். எளிமையான வழிபாட்டு முறையினைக் கொண்டு அவனை உள்ளத்தில் அமைத்து வழிபடலாம். இந்த

வழிபாட்டு முறையில் அறஞ்செய்யும் திறமும் கூறப்படுகிறது. இதனை,

**''யாவர்க்கும் எளிய இறைவர்கோர் பச்சிலை**
**யாவர்க்கும் எளிய ஆவிற்கொரு வாயுறை**
**யாவர்க்கும் எளிய உண்ணும் போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்கும் எளிய பிறருக்கு இன்னுறை தானே''**

என்ற திருமந்திரத்தால் அறியலாம். இந்தத் திருமந்திரமே.

**''நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்**
**நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்**
**அதுவுமற்றவர் வாய்ச் சொல்லருளீர்**
**ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்''**

என்ற பாரதியின் பாட்டிற்கு அடிநாதமாக இலங்கியது என்று கொள்ளலாம்.

எதுவும் கொடுக்க இயலாது எனில் யாரிடமும் அன்பாக இனிய சொற்களைப் பேசு. அதுவே உயர்ந்த வழிபாடும் அறமுமாகும்.

**பாத்திரம் அறிந்து பிச்சையிடு**

அறம் செய்வதற்கும், அறம் பெறுவோரின் தன்மைகளை அறிந்து செய்ய வேண்டும் என்கிறார் திருமூலர். பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பது தமிழ்நாட்டுப் பழமொழி.

தகுதி இல்லாதவர்களுக்குக் கொடுப்பது, வறட்டுப் பசுவை (கன்று ஈணாத, மலட்டுப் பசு) பேணி, பால் கறந்து குடிப்பது போலாகும். வறட்டுப் பசுவைப் பேணுதல் தகுதியில்லாதவர்களுக்குக் கொடுப்பதை ஒக்கும். இக்கருத்து அமைந்த திருமந்திரம்.

**''கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்**
**பாலைக் கறந்து பருகுவதேயொக்கும்**
**சீலமும் நோன்பும் இல்லாதவர்க்கு ஈந்தது**
**காலங்கழிந்த பயிராகுமே''**

என்பதாம். ஒழுக்கமும், நோன்பும் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது, காலமல்லாக் காலத்தில் பயிர் செய்து பாழ்பட்டுப் போனதை ஒக்கும் என்கிறார் திருமூலர்.

இயம, நியமங்களையும், சாத்திர தோத்திரங்களையும், அறிந்தவர்கள் போல் நடித்து, அன்பு சிறிதும் இல்லாமல் பொய் குறளை பேசித்திரிவோருக்கு, தருமம் செய்வது பெரும் பிழை என்று கூறுகிறது திருமந்திரம்.

**''ஈவது யோகஇயம நியமங்கள்**
**சார்வது அறிந்தன்பு தங்கும் அவர்க்கன்றி**
**ஆவது அறிந்து அன்பு தங்காதவர்களுக்கு**
**ஈவது பெரும் பிழை என்று கொள்ளீரே''**

என்பது அத்திருப்பாட்டு

**கல்லாத அரசன்**

தக்கவர்களுக்கே அறம் செய்ய வேண்டும் என்று கூறிய திருமூலர் நாட்டை ஆளும் அரசன் எத்தகையனாக இலங்க வேண்டும் என்று கூறுகிறார். அரசன் அறத்தை உணர்ந்திருக்க வேண்டும். ஆண்டவனைப் போற்ற வேண்டும். கல்விக் கேள்விகளில் சிறந்தவனாக விளங்க வேண்டும். ஆன்றோர்களுடனும் சான்றோர்களுடனும் ஆய்ந்து அரசாட்சி நடத்த வேண்டும். இவ்வாறு செய்யானாயின் அவன் காலனைப் போன்றவனேயாவான். காலனையும், கற்றறியாத அரசன் நல்லவனாக்கி விடுவான் என்பது திருமந்திரம். அது

**''கல்லா அரசனுங் காலனும் நேரொப்பார்**
**கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்**
**கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்**
**நல்லாரைக் காலன் நணுகநில்லானே''**

**காவலன் கடமை**

நாட்டை ஆளுகின்ற அரசன், பசுக்களையும் பெண்களையும், அறவோரையும், வாய்மையாளரையும், தேவவேடம் புனைந்த தூய துறவிகளையும், தெய்வத்தையும் காக்க வேண்டும். இவர்களுக்கு யாதொருவராலும், எவ்வகையாலும் இடர்ப்பாடுகள் வராது காவல் அரணாகத் திகழ வேண்டும். அரசன் இவர்களைக் காவாது ஒழிவானேல் அவன் கொடும் நரகத்தில் அமிழ்வான் என்கிறார் திருமூலர். அக்கூற்று

**''ஆவையும் பாவையும் மற்று அறவோரையும்**
**தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையும்**
**காவலன் காப்பவன் காவாது ஒழிவானேல்**
**மேவு மறுமைக்கும் மீளா நரகமே''**

என்பதாம். திருமூலரின் இக்கூற்று திருக்குறளை நினைவுபடுத்துகிறது. மணிமேகலை காப்பியத்தில் சாத்தனார்.

**மாதவர் நோன்பு மடவார் கற்பும்**
**காவலன் காவல் இன்றெனில் இன்றால்**

(கர்தை 22 வரி 208)

என்று குறிப்பிடுகிறார்.

சான்றோர் பெருமக்கள் அனைவரும்,

இக்கருத்தைக் கூறுவதிலிருந்து நாடாளும் மன்னவன் எத்தகையவனாக இருத்தல் வேண்டும் என்று தெரிகிறதன்றோ?

மக்களுக்கு அறிவுரை

அரசனுக்கு அறிவுரை கூறிய திருமூலர், அரசன் நிழலில் வாழும் குடிமக்களுக்கும் அறிவுரை கூறுகிறார். குடிமக்கள் அவரவர் சமயக் கோட்பாட்டில் நின்றொழுக வேண்டும். சமயக் கணக்கர்கள் பிற சமயக் கணக்கர்களைத் தூற்றக் கூடாது. அவர்கள் வழியில் அவரவர் செல்ல வேண்டும். பிற சமயத்தை நிந்திக்கக் கூடாது. பிற சமயக் கருத்துக்களைத் தூற்றக் கூடாது. சமயப் பொறையோடும் பொதுமையோடும் நடந்து கொள்ள வேண்டும். சமயக் காழ்ப்புணர்ச்சி கொண்டு, பிற சமயங்களைத் தூற்றுவோரை அரசன் தண்டிப்பான். எனவே அரசனும் சமயப் பொறையோடு ஆட்சி நடத்த வேண்டும் என்று குறிப்பால் உணர்த்துகிறார் திருமூலர். பழங்காலந்தொட்டே மக்கள் சமயப் பொறையோடு வாழ வேண்டும் என்று வழிகாட்டிய திருமூலர், திருமந்திரத்தில்

"தத்தஞ் சமயத்தகுதி நில்லாதரை
அத்தன்சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமுஞ் செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்தண்டஞ்செய்வது அவ்வேந்தன் கடனே"

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொன் னெடுங்காலம் தொட்டே தமிழ் மக்கள் சமயப் பொறையோடு வாழ வேண்டும் என்ற கருத்து மேலோங்கி நின்றது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

திருமூலர், மக்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டிய தெய்வச் சித்தர். போக சித்தியையும், உடம்பினைப் பேணும் முறையினையும், அறம்செய்யும் திறத்தையும், அறத்தை ஏற்போர் தகுதிகளையும், காவலன் கடமையினையும் மக்கள் கடமையினையும், மிகச் சிறப்பாகத் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார். இன்னும் சக்திபற்றியும் இயந்திர சக்திகளையும், கரு உற்பத்தியினையும், ஆண் பெண் குழந்தைகள் பிறக்கும் முறையினையும், பல்வேறு தெய்வீகச் சக்கரங்களையும் திருமந்திரத்தில் வழங்கியுள்ளார். அவற்றைக் கற்றுத் தெளிக.

தமிழ்நாடு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலக வளாகத்திலுள்ள அருள்மிகு விஜயவினாயகர் திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து.இராசேந்திரன், இ.ஆ.ப.,அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு ப.தனபால் அவர்கள் மற்றும் அலுவலர்களும் பக்தர்களும் நாள் : 30.04.07









# வேலும் மயிலும் துணை

## கந்தர் அனுபூதி - தொடர்ச்சி

(பேராசிரியர். டாக்டர் சரஸ்வதி இராமநாதன்)

மூன்றாவது பாடல் இதோ

**''வானோ புனல் பார் கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பெருளா வதுசண் முகனே,''**

முருகப்பெருமான் குருவாக நின்று அருணகிரிநாதருக்கு உபதேசம் செய்து அருளிய கந்தரனுபூதி கேட்பதற்கு நான்கு பேர் இருந்தால் பேச்சு வருமா?. ஒரு முறை சிவபெருமானிடம் நான்கு பேர் உபதேசம் கேட்க வரும் பொழுது சொல்லாமல் ஜாடை காட்டி விட்டார். கை காட்டி விட்டு விட்டார். கேட்கிறவர்களுக்கும், சொல்கிறவர்களுக்கும் பக்குவம் வேண்டும். டாக்டர் சுவாமிநாத ஐயரை உருவாக்கியவர் வித்வான் திரு.மீனாட்சி சுந்தரம் பிள்ளை. இன்று சிறந்த தமிழ் நூல்கள் உள்ளதென்றால் அதற்கு காரணம் தமிழ்த்தாத்தா தான். ஒரு நூலில் அகஸ்தியர் ''கைமறித்து'' வந்தார். என்று கூறப்பட்டதன் பொருள் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு புரியவில்லை. உடனடியாக அவர் சுப்பிரமணிய தேசிகரிடம் கேட்டார். அவர் உடனடியாக ஜாடை காட்டினார்.

அதாவது அகஸ்தியர் கை நீட்டி ஆசிர்வாதம் பண்ணியவுடன் சமுத்திரம் வற்றிப் போய்விட்டது. விந்தியமலை அவர் கை நீட்டியவுடன் அமுங்கிப் போய்விட்டது. ஆகவே சமுத்திரத்தையும் ஜெயித்து விட்டார். மலையையும் வென்று விட்டார் என்று பொருள். தேசிகர் ஜாடை காட்டியவுடன் பிள்ளைவாளுக்குப் புரிந்துவிட்டது; சென்று விட்டார். அதே போல் சாஸ்திரம் தெரிந்த நால்வர் சிவபெருமானிடம் சென்று பரம்பொருள் தத்துவத்தை கேட்கும் பொழுது அவர் வார்த்தையினால் சொல்லாமல் ஜாடையால் சொல்லியனுப்பி விட்டார். ஆனால் பரம்பொருள் தத்துவத்தை அருணகிரிநாதர் அவர்கள் வார்த்தையினால் கூறிவிட்டார். அவன் பஞ்சபூதங்களும்தான். அவன் வேதமும் தான். அவன் நானும் தானாகி நின்றான். வான், புனல், கனல், காற்று என யாதும் ஆகிநின்றான். நான் தானாகவும் நின்றான்.

**''வளைபட்டனகம் மாதொரு மக்களெனும்
தளைபட்ட தியத் தகுமோ தகுமோ!''**
என்று நான்காம் திருப்பாடலில் தன் தவிப்பை உணர்த்துவது போல நமக்கு உணர்த்துகிறார்.

கல்யாணம் என்பது நம்மையெல்லாம் பொறுத்தவரை இந்த இன்பத்தை அனுபவிக்கிறதற்கு மட்டுமல்ல. இந்த இல்லறத்தில் ஏன் இருக்கிறோம்? சன்னியாசம் பெறுவதற்கு தான் என்றால் இதைக் கேட்கிறவர்கள் 70 வயது தாண்டியவர்கள் தாம். வளையோடு வரக் கூடிய பெண், வீட்டில் உள்ளவனுக்கு (தளை) விலங்காக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் குடும்பத்தில் இன்பம் இருக்காது. கணவன் ஒரு பொருளைக் கேட்டால் அதை இல்லை என்று சொல்ல மாட்டாள் மனைவி. வீட்டினுடைய பாக்கியமே மனைவிதான். கணவன் மனைவியை சந்தேகப்படக் கூடாது. ஊரில் உள்ளவர்கள் அனைவரும் சந்தேகப்பட்டாலும் மனைவியைக் கணவன் சந்தேகப்படாமல் இருந்தால் அதுதான் அவள் பாக்கியம். சீதை தீக்குளிப்பதற்கு முன் ஒரு வார்த்தை கூறினாள்.

அதாவது இலங்கையில் இருக்கிற ஒரு குளத்தில் (கருப்பு நிற நீர் உள்ள குளத்தில்) தான் குளிப்பேன். ஏன் என்றால் அந்த நிறம் ராமனையும் அதில் உள்ள தாமரை

இராமனுடைய உருவங்களையும் நினைவுபடுத்தும். அது தவிர வேறு எந்த இடத்திலும் தன்னுடைய பாதங்கள் பட்டது கூடக் கிடையாது என்று கூறுகிறாள். அக்கினிப் பிரவேசம் சீதை செய்யும் போது சீதை தன் கூந்தலில் மலர் வைத்திருந்தாள். அந்த மலரில் வண்டுகளும் பாடிக் கொண்டே இருந்தது. அக்கினிப் பிரவேசம் செய்து திரும்ப வரும்போது அந்த கூந்தலிலுள்ள பூவும் வாடவில்லை. அந்த வண்டுகளும் சிறிதும் சேதப்படாமல் மேலும் அதிகமாகப் பாடிக் கொண்டிருந்தது என்று கூறியுள்ளார். அந்த நிலையிலும் கணவனை முறியாத பண்பு, பொறுமை சீதையின் தனித்திறம். சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும் ஒருவனுக்கு வேண்டும். அப்படிப்பட்ட இல்லறம் நம்மைத் தளைப்படுத்தாத நல்லறம்.

மனைவி மக்கள் என்ற சங்கிலியால் நான் பிணிபட்டு அழியலாமா? சூரன் உரமும் கிரௌஞ்சமலையும் ஊடுருவ வேல் விட்ட முருகா, சொல்!

''வளைபட்ட கைம்மாதொடு மக்கள் எனும்
தளைபட் டழியத் தகுமோ! தகுமோ!
கிளைபட் டெழுசூர் உரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவேல வனே!
இது நான்காவது அனுபூதிப் பாடல்.
மகமாயை களைந்திட வல்லபிரான்''
முக மாறும் பொழிந்து மொழிந்திலனே!

என்ற அடுத்த திருப்பாடலிலும் சகமாயையில் நான் மயங்கித் தயங்காமல் ஆறுமுகன் அருளவேண்டும் என்று கேட்கிறார். பெரிதாகிய மாயத்தைக் களைய வல்லவன் முருகன். மாயை பெற்ற மகன் சூரன். மாயப் போர் செய்தவன். மாயத்தால் பல வடிவுகள் எடுத்தவன். ஞான வேலால் மாய இருளை நீக்கியவன் முருகன். மஹாமாயை மாயத்தின் மொத்த உருவமேயாய் நின்ற சூரனை வெல்ல வேல் விட்ட முருகா! ஆறுமுகத்தில் ஒரு முகம் மாறுபடு சூரரை வதைக்க என்றே கொண்டவா! அகம், மாடு (செல்வம்) மங்கையர் என்ற மாயைக்குள் நான் சிக்கித் தவிக்காமல் என்று ஈடேறுவேன்! கூறமாட்டாயா! அருள் தரமாட்டாயா! என்று ஐந்தாம் திருப்பாட்டில் மாயை அகல மனமிரங்க வேண்டுகிறார்!.

''மகமா யைகளைத் திடவல் லபிரான்
முகமாறு மொழிந் துமொழிந் திலனே
அகமாடைமடந் தையரென் றயருஞ்
சகமாயையுள் நின்றுத யங்குவதே.''

இனி, ஆறாவது பாடல் : ஆறுவது முகம். குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பில் மடவரல் வள்ளியொடு நகையாடியதல்லவா! ஆறாவது அனுபூதி வள்ளியிடம் முருகன் கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறது. தேவாதிதேவர் முருகன் பாதமலர் சூடவந்து காத்திருக்கையில், இவனோ, தணியாத காதல் வேகத்துடன், குறவர் சிறுமி, கொடியிடை வள்ளி பாதத்தில் பணிந்து ''பணி யாது?'' (என்ன வேலை இடப் போகிறாய்?) என்று குறையிரந்து நிற்கிறானாம். குடங்கைக்கு அடங்கா நெடுங்கண்ணில் அஞ்சனம் தீட்டியபின், கஸ்தூரி திலகமிட்டு, கொங்கையில் பசுஞ்சந்தனம் அப்பிவிட்டு, ''இன்னும் ஏதாவது செய்யட்டுமா? என்று ஏங்கி நின்றதாகக் குமரகுருபரரும் பாடுவாரே! ''உன் குற்றேவல் செய்யப் பணி'' என்று அவன் தொண்டை வாய்த் தேனூறு இளவிக்கு வாயூறி நின்ற திறம் அவர் காட்டிய காட்சியே! மனம் கல்லாக இறுகிய பாறையாக, இருந்தால் அங்கு உன் இரு தாமரைப் பாதங்கள் படியுமா? தாமரை கல்லில் முளைக்குமா? அதற்காகத்தான் நெஞ்சக் கனகல் நெகிழ்ந்து உருக வேண்டும் என்று முதல் பாட்டிலேயே வேண்டினாரோ?.

''திணியான மனோ சிலைமீ துனதாள்
அணியார் அரவிந்தம் அரும்பு மதோ
பணியா எனவள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயா பரனே!''

சக்தியும், சிவனும் வேறானவர்களா? முருகனும் வள்ளியும் வேறானவர்களா? கருணையே சக்தி. ''அருளது சக்தியாகும் அரன் தனக்கு'' என்பதே சித்தாந்தம். முருகன் மனைவி வள்ளி காலில் விழுந்தான் என்றால் பெண்டாட்டி தாசன் என்றா பொருள்? நமக்கும் அவனுக்கும் வேறுபாடு இல்லையா?. ஒரு வீட்டில் பிச்சைக்காரன் அம்மா! அம்மா! என்று அழைக்கிறான். உலகியல் ஆடவர் மனைவி காலில் விழுவது தாகத்தால், காமத்தால், முருகன் தேவியின் பாதத்தில் விழுவது கருணையால், உலகியலில் ஆடவர் மோகம் கொண்டால் வெறி மிகும். அருளியலில் ஆண்டவன் மோகம் கொண்டால் கருணை மிகும். தணியா அதிமோக தயாபரனே. என்றது அதனால் தான். எம்பெருமாட்டி மனம் குளிரக் குளிர உலகிற்கு அருள்மழையால் குளிர்ச்சி கிடைக்குமே! அதற்காகத்தான் பணிகிறான் முருகன்.

''பணியா! எனவள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயாபரன்!''

மோகித்து அலைபவன் அல்லன்" அவனது மோகம் தயையால் வந்தது. அவன் தயாபரன், தாயிற் சிறந்த தயை உடையவன். என அனுபூதி ஒவ்வொரு சொல்லிலும் செறிவும் அழகும் காட்டி நிற்பதைப் பார்க்கிறோம்.

- தொடரும்



# பதில்

திருநாவுக்கரசு நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

1. சமணர்களாலே ஏழு நாள் சுண்ணாம்பறையிலே பூட்டப்பட்டு இருந்தும் வேவாது பிழைத்தது.
2. சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டுஞ் சாவாது பிழைத்தது.
3. சமணர்கள் விடுத்த யானையினால் வலஞ்செய்து வணங்கப்பட்டது.
4. சமணர்கள் கல்லிலே சேர்த்துக் கட்டிச் சமுத்திரத்திலே இடவும் அக்கல்லே தோணியாகக் கரை ஏறினது.
5. சிவபெருமானிடத்திலே படிக்காசு பெற்றது.
6. வேதாரணியத்திலே வேதங்களாலே பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடினது.
7. விஷத்தினாலே இறந்த பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தது.
8. காசிக்கு அப்பால் ஒரு தடாகத்தின் உள்ளே முழுகித் திருவையாற்றில் ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரை ஏறினது.

சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

1. செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.
2. சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்தில் உள்ள ஆற்றிலே போட்டுத் திருவாரூரில் உள்ள குளத்திலே எடுத்து.
3. காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.
4. முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம் முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்தது.
5. வெள்ளை யானையில் ஏறிக்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளினது.

## "எண்ணச் சிதறல்"

108 திவ்ய தேசங்களில் ஒன்றாய்த் திகழும் தென் திருப்பதி எனும் பெயர் பெற்ற திருமலை வையாவூர் திருத்தலத்தைப் பற்றிய அற்புத வரலாற்றை விவரித்த கட்டுரையைப் படித்து முடித்ததும் அந்த ஆலயம் சென்று அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாளை தரிசித்தது போன்ற பரவச சிலிர்ப்பு ஏற்பட்டது என்றால் மிகையாகா. தொடர்ந்து பல திவ்ய தேசங்கள் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகளை வெளியிட வேண்டுகிறேன். தொடரட்டும் ஆன்மிக அருட்பணி

- த. சத்தியநாராயணன்,
அயன்புரம்.

திருநாராயணபுரம் அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் ஆலயத்திற்கு ஓரிருமுறை சென்று வந்த போதெல்லாம் அந்த ஆலயத்தின் அருமை பெருமைகளை என்னால் முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால், இம்மாத திருக்கோயில் இதழில் வெளியாகியிருந்த பிரும்மாவிற்கு வேத உபதேசம் செய்த பெருமாள் என்ற கட்டுரையைப் படித்ததும். வேதநாராயணப் பெருமாளின் சக்தியை நினைத்து மெய் சிலிர்த்துப் போனேன். காவிரி வடகரையில் அமைந்திருக்கும் திருமாலின் பஞ்சதலங்கள் பற்றிய தகவல்கள் ஆன்மிக உள்ளங்களுக்கு. பேருவகை அளித்திருப்பது நிச்சயம்.

- இரா.வளையாபதி
கரூர் மாவட்டம்.

# அருள்மிகு ஜெகந்நாதப் பெருமாள் மற்றும் அருள்மிகு திருமழிசைஆழ்வார் திருக்கோயில்

''தருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீர
திருச்சந்த விருத்தஞ்செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச்சந்துங் காரகிலுங் கமழ்கோங்கு மணநாறுந்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியில்''

- திருக்கச்சி நம்பிகள்

தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து என்ற முதுமொழிக்கு ஏற்ப தொண்டை



மண்டலத்தில் சிறந்து விளங்குவது திருமழிசைபேரூர். மகிமை பொருந்திய ஸாரமான க்ஷேத்ரம் ஆதலின் மஹீஸாரம் (மழிசை) எனப்பட்டது, திருமகளும், மண்மகளும், ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல் என்னும் ஆழ்வார் பாசுரத்திற்கேற்ப, திருமகள் இத்தலத்தில் திருமங்கைவல்லி என்னும் பெயருடன் திகழ்கிறாள். எனவே திருமகள் பொருந்தி உறையும் தலம் என்னும் பொருளில் திரு என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டுத் திருமழிசைஆயிற்று என்பர், இங்கே அவதரித்த திருமழிசைஆழ்வார், ஆழ்வார்கள் சான்றோருள் சிறந்தவராகக் கருதப்படுகிறார். இத்தலம் பல்லவர்கள் காலத்தில் புகழ் பெற்று விளங்கியது.

திருமழிசை வைணவமும் சைவமும் செழித்து வளர்ந்த பூமியாகும்.

ஸ்ரீ ஜெகந்நாதர் எழுந்தருளியுள்ள இப்பகுதிக்கு மத்திய ஜெகந்நாதம் என்று பெயர். வடக்கேயுள்ள ஜெகந்நாதம் உத்தர ஜெகந்நாதம் எனப்படும், திருமழிசைஆழ்வார் பன்னிரு ஆழ்வார்களுள் நான்காவது ஆழ்வார் ஆவார். இவர் திருமழிசைப்பிரான் எனவும் வழங்கப்படுவர், இவ்வூர் பக்திசாரர் என்ற சிறப்புப் பெயர் கொண்ட இவர் பிறந்த பதியாகும். இவர் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் நான்முகன் திருவந்தாதியையும், திருச்சந்த விருத்தத்தையும் பாடியருளியவர். இதில் நான்முகன் திருவந்தாதி தொண்ணூற்றாறு பாசுரங்களையும், திருச்சந்த விருத்தம் நூற்றிருபது பாசுரங்களையும் கொண்டதாகும்.

இவர் திருவரங்கம், திருவல்லிக்கேணி, அன்பில், ஊரகம், எவ்வுள், கண்ணன் கபித்தலம் முதலான திருப்பதிகளைத் தரிசித்து அவற்றை மங்களாசாசனம் செய்துள்ளார். இவருடைய திருச்சந்நிதி மிகப் பெரிய அளவில் ஜெகந்நாதப் பெருமாள் கோயிலுக்குள் இடம் பெற்றுள்ளது. தைமாத மக நட்சத்திரமாகிய இவருடைய திருநட்சத்திரத்தையொட்டிப் பெரிய அளவில் திருவிழாகொண்டாடப்படுகிறது.

நெடுங்காலமாகத் திருமழிசைஎன்ற பெயரே வழக்கில் இருந்தாலும் இங்குத் தோன்றி இத்தலத்திற்குப் பெருமை சேர்த்த ஆழ்வார் இவ்வூர் பெயரால் திருமழிசையாழ்வார் எனப்பட்டாலும்

பின்வந்த வைணவ ஆசாரியர்கள் இத்தலத்தை திருமழிசைஎன்று கொண்டாடினும் புராணங்களில் இவ்வூர்ப் பெயர் மகீசாரம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. இது பூமியிலுள்ள தலங்களின் மகிமைகளின் சாரத்தைத்தன்னகத்தே கொண்டதால் மகீசாரம் எனப்பட்டதென்பர்.

அத்ரி, பிருகு, வசிட்டர், பார்க்கவர் முதலிய பலரும் பிரம்மரிஷிகள் ஆவர். அவர்கள்சத்யலோகத்திற்குச்சென்றனர். அங்கு தலைமை தாங்கித் திகழ்ந்த பிரம்மதேவரைத் தரிசித்தனர். திருவடிகளை வணங்கி கை கூப்பினர். பிரம்மதேவரும் அவர்கள் கருத்தினைக் குறிப்பால் உணர்ந்தார்.

பல உலகங்களுள்ளும் சிறந்தது பூவுலகு, இகபர மோட்சங்களின் பேற்றை எய்த முயற்சி செய்வதற்கு ஏற்றது பூவுலகு. இவ்வுலகின் மிகச் சிறந்த க்ஷேத்திரத்தில் அரும்பெரும் தவமியற்ற நாங்கள் எண்ணம் கொண்டுள்ளோம். அத்தகைய நீர்மிகுதலம் எது- என்பதை அறிந்து செல்லவே இங்கு தங்களை நாடி வந்துள்ளோம். அதன் திவ்விய நாமத்தை எங்களுக்கு தேவரீர் உரைத்தருள வேண்டும் என்று அனைவரும் பிரம்மதேவனை வேண்டினர்.

மூவுலகும் படைத்த நான்முகன் தேவசிற்பியான சதுர்முகனைத் துலாக்கோல் கொண்டுவரும்படிக் கூறினார். அத்துலாக்கோலின் ஒருபக்கத் தட்டில் திருமழிசைத் தலத்தினை இட்டு, மற்றொரு பக்கத் தட்டில் ஐம்பது யோசனை பரப்பளவுள்ள ஏனைய மண்ணுலகு முழுமையையும் வைத்து, முனிபுங்கவர்கள் காணும் வகையில் காட்டுவாயாக என்று தேவசிற்பியிடம் நான்முகன் கூறினார்.

தேவசிற்பியும் நான்முகன் ஆணைப்படியே செய்தார். துலாக்கோலின் ஒரு தட்டிலே திருமழிசைத்தலம் விளங்கிற்று, ஏனைய பூவுலக முழுமையும் மற்றொரு தட்டில் இருந்தது. எனினும் முந்திய தட்டே கனமாகித் தாழ்ந்து நின்றது. பிந்திய தட்டு மேலெழும்பி நின்றது.

முனிபுங்கவர்கள் இக்காட்சியைக் கண்ணாரக் கண்டனர், வியந்தனர், ஒரு சிற்றூர் உலகினைவிட உயர்ந்ததாகிக் கண்ணெதிரே விளங்கிற்று. திருமழிசையின் உயர்வை, மேன்மையை நேருக்கு நேரே முனிபுங்கவர்கட்கு எடுத்துக்காட்டினார் பிரம்மதேவர்.

மகிமையின் சாரம் செறியும் தலமே திருமழிசை. அதன் பெருமை, அகிலத்தினும் பெரியது. ''உங்களது தவத்திற்கு உற்ற உரியதலம் திருமழிசையே, அது சிறந்த வளங்களைக் கொண்ட தலம். அங்கே



தவங்களியற்றி தனிப்பெரும் பலன்களைப் பெறுவீர்களாக'' என்று நான்முகன் நல்லாசியும் நல்கினார்.

முனிவர்கள் மகீசாரசேத்திரமான திருமழிசையை அடைந்தனர். அங்கு அருந்தவம் இயற்றினர். பெறற்கரிய பெரும்பேறுகள் பெற்று உயர்கதி எய்தினர். இந்நிகழ்ச்சியை விளக்குவது கீழ்வரும் பாடலாகும்

''உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க-
உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது''

இப்பூவுலகில் பற்பல புண்ணிய தலங்கள் உள்ளன. அவை அனைத்துமே சேர்ந்தாலும் திருமழிசைக்கு ஈடாகமாட்டா என்று விளங்குகிறது இப்பாடல்.

**திருமழிசையாழ்வார் அற்புதங்கள்**

திருமழிசைஆழ்வார் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்கள் சிலவற்றை காண்போம்.



1. இளமையில் திருமழிசையாழ்வார் என்னும் திருவாளன் - பங்கயச் செல்வி என்னும் வேளாளர் தம்பதியரால் வளர்க்கப்பட்டார். பிறிதொரு வேளாளர் குலத் தம்பதியர்க்குத் தாம் உண்டு சேஷித்த பாலின் மூலம் இளமையளிக்கவும், அவர்கள் ஒரு குழந்தையைப் பெற, அக்குழந்தைக்குக் கணிகண்ணன் எனப் பெயரிட்டுத் தம்சீடராக்கிக் கொண்டார்.

2. ஆழ்வார் காஞ்சி மாநகரில் எழுந்தருளியிருந்தபோது இவருக்குத் திருவலகிட்டுத் தொண்டு செய்து வந்தாள் மூதாட்டி ஒருத்தி. அவள் அவரிடம் பக்தி பூண்டவள். அவர் அவளுக்கு யௌவனம் அளித்தார். அது கேட்ட அந்நகர அரசன் பல்லவராயன், தமக்கும் இளமை அளிக்குமாறும், தம்மை குறித்துப் பாடுமாறும் வேண்ட, ஆழ்வார் நரஸ்த்துதி பாட இசையாது மறுக்கவும், அரசன் கணிகண்ணனை அந்நகரில் இருந்து வெளியேறுமாறு ஆணையிட, திருமாலும் இவர் பின்னே செல்ல நகரமே இருள் சூழ்ந்தது. காஞ்சி மன்னர் அதை அறிந்து ஆழ்வாரிடம் வேண்டிக் கொள்ள, பின் ஆழ்வார் பைந்நாகப்பாய் படுத்துக்கொள் என்று வேண்ட திருமால் மீண்டும் அவ்வாறே முன்போல் சயனித்தருளினன்.

3. ஆழ்வார் திருக்குடந்தை (கும்பகோணம்) எம்பெருமானைச் சேவிக்க, அதுபோது மகிழ்ந்த எம்பெருமான், தமது அர்ச்சாவதார சமாதியைக் கடந்து எழுந்திருந்து பேசமுயல, ஆழ்வார், வாழிகேசனே என்று மங்களாசாஸனம் செய்தருளினார்.

4. திருமழிசைப்பிரான் யோகத்திலிருந்த போது ஆகாய மார்க்கமாக பரமசிவன், பார்வதி தேவியோடு ரிஷப வாகனத்தில் செல்ல, அப்போது தேவியின் பரிந்துரையால் சிவபெருமான் இவ்விஷ்ணு பக்தரோடு வார்த்தையாட, அது விவாதமாக முடியவும், இறுதியில் அவர் ஆழ்வாரின் பக்தியை மெச்சி, ''பக்திஸாரர்'' என்று விருதளித்துப் பாராட்டினார்.

5. திருமழிசைப்பிரான் சாக்கியம், சமணம், சைவம் முதலிய சமயங்களிலே ஈடுபட தமது அஷ்டாங்க யோகத்திற்குக் காரணமான ஜகத்தாரண வஸ்து இன்னது என்றறியத் தலைப்பட்டார். சைவ சமயத்தில் இருந்தபோது இவர் 'சிவவாக்கியர்' என்னும் பெயருடன் விளங்கினார். இவரால் இயற்றப்பட்ட பாடல்கள், சிவவாக்கியர் திரு ஆயிரம் என வழங்கப்படுகின்றன. கடைசியாக இவர் பேயாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப்பட்டு வைணவ சமயத்தில் சேர்ந்து, திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி என்னும் இரு பிரபந்தங்களை இயற்றினார்.

**ஆழ்வார் அவதார ஸ்தலம்**

இத்தகு பெருமை மிக்க ஸ்ரீ திருமழிசைஆழ்வாரின் திருவவதார ஸ்தலம் திருக்கோயிலுக்குத் தெற்கே சிறிது தூரத்தில் அழகியதோர் மண்டபமாக விளங்குகிறது, அகில ஸ்ரீ வைணவர்களும் பகவத் பாகவதாபிமானிகளும் திருமழிசைக்கு வந்து ஆழ்வாரையும் அவர் திருவவதார

ஸ்தலத்தையும் சேவித்து கிருதார்த்தரர்களாக வேண்டுவது இன்றியமையாத கடமையாகும்.

ஸ்ரீ திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

### ஆலயத்தின் அமைப்பு

இராஜகோபுரம் கம்பீரமாக உயர்ந்து ஐந்து நிலைகளும் ஏழு கலசங்களும் கொண்டதாக புத்தம் புதிய பொலிவுடன் விளங்குகின்றது. கவர்ச்சியான கலைவண்ணங்கள் கோபுரத்தில் பளிச்சிடுகின்றன. கலைக்கண் கொண்டு கண்டால், கருத்துகள் கிளர்ந்தெழும்.

கோபுரவாயிலின் சற்றே முன்புறம் திருக்குளம் அமைந்துள்ளது. இதற்கு பிருகு தீர்த்தம் என்ற பெயர். திவ்விய தீர்த்தமாகையால் பாபம் போக்கும் புனிதம் கொண்டு விளங்குகிறது. இது திருக்குளத்தின் சிறப்பாகும்.

குளத்திற்கும் கோபுரத்திற்கும் இடையே அற்புதமான மரச்சிற்பங்களுடன் கலை நுணுக்கத்துடன் செய்து பொருத்தப்பட்டுள்ள பெரிய திருத்தேர் உள்ளது. மேலும் வாகன மண்டபம், பதினாறுகால் மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன.

கோயிலுக்கு இரு பிரகாரங்கள் உண்டு. கோயிலுக்கும், கோயில் மதில்களுக்கும் இடையே முதலாவதான வெளிப்பிரகாரம் உள்ளது. இது திறந்த வெளியில் உள்ள பிரகாரம். கோயிலுக்குள் மூலவர் ஸ்ரீ ஜெகன்னாதப் பெருமாளைச் சுற்றியுள்ளதாக இரண்டாவதாக உட்பிரகாரம் அமைந்துள்ளது.

முன் கோபுர வாயிலின் வழியே உள்ளே நுழைந்ததும் துவஜஸ்தம்பம் பலிபீடம் முன்பக்கம் காணலாம்.

### தும்பிக்கை ஆழ்வார்

இவர் விக்னேஸ்வரர் எனவும் வழங்கப்படுகிறார். இவர் பக்தர்களான எல்லோர்க்கும் தடைதகர்க்கும் தெய்வமாக விளங்குகிறார்.

பிரதான பெருமாள் கோயிலின் மத்தியில் விநாயகர் வீற்றுள்ளார். இவருக்கு வினாயக சதுர்த்தியன்று விசேஷ பூஜைகள் நடத்தப்படுகின்றன. விநாயகர் வயிற்றின் நடுப்பகுதியில் இராகுவும், கேதுவும் இணைந்து உள்ள சர்ப்பம் காணப்படுகிறது. இது நாகதோஷ நிவர்த்திக்கான தனித்தன்மையானது.

### ஸ்ரீ திருமங்கை வல்லித் தாயார் பெருமை

இத்திருமழிசையில் தனிக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருமங்கை வல்லித் தாயார் மிகவும் சக்தி வாய்ந்தவள். பக்தர்கள் வேண்டும் அஷ்ட ஐஸ்வர்யத்தையும், ஸந்தான விருத்தியையும், புத்திர பாக்கியமும் வழங்குபவள், ஸ்ரீ தாயார் சன்னிதியும் அமைந்துள்ளன. தாயார் ஸ்ரீ திருமங்கைவல்லித் தாயார் என்று திருநாமம் கொண்டுள்ளார்.

### ஸ்ரீ வைஷ்ணவி பெருமை

ஸ்ரீ வைஷ்ணவி நின்ற திருக்கோலத்தில் கருணையே வடிவமாகக் காட்சியளிக்கிறார். பிரதி வாரம் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இராகு காலத்தில் விசேட திருமஞ்சனம், பிரார்த்தனைகள் நடைபெறுவது இதன் சிறப்பம்சமாகும். திருமழிசைஆழ்வாரின் கோஷ்டங்களான ஒன்றில் பிரகார தேவியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவி திருமாலின் சங்கு சக்கரங்களைக் கையில் தாங்கி நின்றருளி சேவை சாதிக்கிறாள். விரைவில் திருமணம் விரும்பும் பெண்களும், அவர்களின் பெற்றோர்களும் மேற்படி வைஷ்ணவிக்குப் பூமாலை சாத்தி வழிபட்டு வருகின்றனர். அவர்களுக்கு விரைவிலேயே திருமணம் நடைபெற்று வருவது கண்கூடாகும்.

ஸ்ரீ அழகிய சிங்கர் சன்னதியில் ஸ்ரீ லட்சுமி தேவியைத் தனது மடியில் வைத்துக் கொண்டு ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் காட்சியளிக்கிறார். இங்கே திரும்பியதும், ஸ்ரீ ஆண்டாள் சன்னதியும், ஸ்ரீ மணவாள மாமுனிகள் சன்னதியும் கல்யாண மண்டபமும் உள்ளன.

பிரதான கோயிலின் கர்ப்ப கிருகத்தில் ஸ்ரீ ஜெகன்னாதப் பெருமாள் பூர்ணசேவை தந்தருளுகிறார். கிழக்கு முகமாக ருக்மணி சத்தியபாமா சமேதராக சேவை சாதித்து அருள்கிறார். பிருகு, மார்க்கண்டேய மகரிஷிகள் தவக்கோலத்துடன் சேவிப்பவர்களாக கர்ப்பகிரகத்திலேயே உள்ளனர். கர்ப்பகிரகத்திற்கு எதிரில் மகாமண்டபம் அமைந்துள்ளது.

திருமழிசைஆழ்வார் சன்னதி தெற்கு நோக்கியபடி அமைந்துள்ளது. சன்னதி உட்கோயிலின் திருவாயிலை மகா மண்டபத்தினூடே நோக்கியபடி இருக்கிறது.

உட்பிரகாரத்தில் கர்ப்பகிரகத்தை முழுவதும் வலம் வர சாத்தியமாகிறது. ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ ஜெகன்னாதர், ஸ்ரீ திருமங்கைவல்லி தாயார், ஸ்ரீ திருமழிசைஆழ்வார் ஆகியோர் இக்கோவிலின் பிரதான மூர்த்திகளாவர்.

**ஸ்ரீப்ரகார ஜெகந்நாதர்**

கோயில் பீகமுத்திரை ஆனபிறகு வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்கள் உள்ளிருக்கும் மூலவர் பெருமாளை சேவிக்க இயலாத நிலையில் தன்னை சேவித்து உய்வதற்காக வெளிப்பிரகாரத்தில் எழுந்தருளியிருக்கிறார். அன்பர்களின் விருப்பம் அனைத்தும் கைகூடும் என்பது உறுதி.

இங்குப் பிரதி ஆண்டும் ஆனி மாதம் ஸ்ரீ ஜெகன்னாதப் பெருமாளுக்கு பிரம்மோத்ஸவமும் ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ மணவாள மாமுனிகள் உத்ஸவமும், தை மாதத்தில் மக நட்சத்திரத்தில் ஸ்ரீ திருமழிசைஆழ்வார் திரு அவதார மகோத்ஸவமும், மாசி மாதத்தில் 3 நாட்கள் தெப்போத்ஸவமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

**ஸ்ரீ ஜெகன்னாதர் கோவில் கல்வெட்டுகள்**

பெருமாள் கோயில்கள் மூன்றாம் குலோத்துங்க சோழன் கி.பி. 1178/1218 கோப்பெருங்சிங்கன் கி.பி. 1243/1261, விசயகண்ட கோபாலன் கி.பி. 1250/1280, அரியண்ண உடையார் கி.பி. 1376/1404, விருபாட்சன் கி.பி. 1465/1485 ஆகிய அரசர்கள் காலத்தில் இக்கோவில்கள் பராமரிக்கப்பட்டன என்று தெரிகிறது.

கி.பி. 1255 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இரு கோவில்களுக்கும் நிலம் வழங்கியது இதில் உள்ளது. கி.பி. 1178/1218 ஆம் ஆண்டு கல்வெட்டின் மூலம் திருமழிசைசதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டதை அறியலாம். 16ஆம் நூற்றாண்டு கல்வெட்டின் மூலம் ஆழ்வார் கோவிலுக்கு பிள்ளையார் (இளவரசர்) குலோத்துங்க சோழகண்ணப்பன், நல்லநயினார், பஞ்சநதிவாணன் நிலங்கரையன் ஆகியோரால் 1650 குழிநிலம் தானம் வழங்கப்பட்டதை அறியலாம். 13ஆம் நூற்றாண்டில் 'திருமழிசைஅகரம்' என்று அழைக்கப்பட்டுள்ளது.

மேலே உள்ள கல்வெட்டுகள் காட்டும் விவரப்படி திருமழிசைஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறப்புற்று, புண்ணிய தலமாக விளங்கியது என்று உணர முடியும். மேலும் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருக்கச்சி நம்பிகள் திருமழிசையைப் புகழ்ந்து பாடி உள்ளதும் இதனை உறுதிப்படுத்தும்.

## ஆதலால் பிறவி வேண்டேன்



வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியும் உறங்கிப்போகும் நின்றதிற் பதினை யாண்டு
பேதை பாலகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே

தொண்டரடிப் பொடி ஆழ்வார்

நினைவலைகள்

# கந்த புராண நுண்பொருள்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி -

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள், பத்துத் திருக்கரங்கள், சிவபெருமானுடைய தேர் இந்தப் பூமி, அதில் சக்கரமாய் இருப்பது ஆதித்த பகவான்; சூரிய பகவான், ஒளி வந்து ஒரு வினாடிக்கு லட்சத்து 86 ஆயிரம் மைல் பிரயாணம் பண்ணும், ஒரு நிமிஷத்துக்கு 60 வினாடி. அப்படி ஆதித்த பகவான் இருக்கிற மண்டலத்திலிருந்து ஒளி புறப்படுமானால் வினாடி ஒன்றுக்கு லட்சத்து 86 ஆயிரம் மைல் வீதம் பிரயாணம் பண்ணினால் அந்த ஒளி பூமண்டலத்துக்கு வருவதற்கு 8 நிமிடங்கள் ஆகின்றன. நேரம் கிடைக்கும்போது கணக்குப் போட்டுப் பார்த்து கொள்ளுங்கள், அத்தனைத் தொலைவிலே இருக்கிற ஆதித்த பகவான் விநாயகப் பெருமானுடைய இடையிலே அந்த உடையைச் சேர்த்துக் கட்டுகின்ற பாம்பினுடைய மணியாக இருக்கின்றார், அந்த விநாயகப் பெருமானுடைய அந்தத் திருவயிறு ஆதித்த மண்டலமாக்கி இருக்கிறார். அதற்கு மேலே மார்பு, அதற்கு மேலே கழுத்து, அதற்கு மேலே சிரசு, அகடு என்றால் வயிறு. அசக்கு கட்டுதல். அரவு என்றால் பாம்பு.



''அகடு அசக்கு அரவின் மணியா உறை''

விநாயகப் பெருமானைப் பற்றி இந்த அற்புதமானப் பாடலைப் பாடுகிறார் கச்சியப்பர். கந்தபுராணம் உயர்ந்த ஞான பொக்கிஷம். எத்தனை எத்தனையோ அற்புதமான கருத்துக்களை எல்லாம் அதிலே நமக்கு அருளிச் செய்திருக்கிறார், அதைப் பாடிக் கொடுத்த கச்சியப்பர், இந்தக் காஞ்சீபுரம். ஆதிசைவத் திருமரபிலே வந்தவர், ஒவ்வொரு நாளும் 200 பாடல் 300 பாடல் எழுதி அதை எம்பெருமானுடைய திருவடியிலே வைத்து விட்டுப் போவார், அதிலே திருத்தங்கள் இருக்குமாம். ஆண்டவன் திருத்திய நூல், அந்த முருகனைப் பற்றிச் சொல்லுகின்ற நூல். அதிலே ஒன்று இரண்டு சொல்லுகின்றேன். எத்தனையோ தத்துவங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

உலகம் தோன்றிய நாள் தொட்டு தாய்மார்கள் குழந்தைகளைப் பெறுவார்கள். அப்பா பேர் வைப்பார். இது புரட்சி; அப்பா குழந்தை பெற்று அம்மா பேர் வைக்கிறாள். உலகத்தில் எங்குமே ஆண்கள் மருத்துவ விடுதி கிடையாது. ஒரு ஆண் பிள்ளை குழந்தை பெற்றான் என்ற சரித்திரம் கிடையாது. கைலாயத்தில்தான் சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து முருகப் பெருமானை உண்டாக்குகிறார். ஆண்பிள்ளை அவர் ஒருவர்தான். நாமெல்லாம் பெண் பிள்ளைகள் தானே. தேவர் எல்லோரும் பரமேசுவரனிடம் போய் முறையிட்டார்கள். ஆண்டவனே! சூரபன்மனுடைய ஆட்சிக் கொடுமை எங்களுக்குத் தாங்க முடியவில்லை. நாங்கள் தவஞ்செய்ய முடியவில்லை. எங்களையெல்லாம் துன்புறுத்துகின்றான். அநேக தேவர்களையும், தேவ மாதர்களையும் சிறையில் அடைத்துவிட்டான் சுவாமி என முறையிட்டார்கள். இந்திரனுக்கு ஒரே ஒரு மகன். அவன் பெயர் ஜயந்தன். அந்த ஒரே மகனை ஜெயிலில் போட்டு அடைத்து வேதனைப்படுத்துகிறான் சூரபத்மன். நாம் ஜெயிலில் இருந்தால் அப்பா அம்மாவுக்கு வேதனை. ஆகவே சுவாமி! சூரபத்மனுடைய ஆட்சிக் கொடுமை எங்களாலே தாங்க முடியவில்லை!'' என்றார்.

''ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல''

தேவர்கள் சிவபெருமானிடத்திலே போய் முறையிடுகின்ற பாடல். கடவுளுக்கு என்ன என்ன இலக்கணங்கள் உண்டோ அத்தனையும் அந்தப் பாடலில் வருகிறது. ஒரு பொருளுக்கு இலக்கணம் உண்டு. நான் ஒன்று இரண்டு சொல்கிறேன். கோவிலிலே பூஜை பண்ணுகிறார் அர்ச்சகர் என்றால் அவர் ஆசாரமாய் இருக்க வேண்டும். நான் உலகத்தாருக்கு அறவுரை சொல்கின்றவன். சொல்லும் செயலும் என்னிடம் ஒன்றாக இருக்க வேண்டும். சொல் வேறு செயல் வேறாக இருக்கக் கூடாது. ஆகவே சொற்பொழிவாளர் என்று சொன்னால் சொல்லும் செயலும் ஒன்றியிருக்க வேண்டும். அதே மாதிரி அரசியல்

தலைவர் என்று சொன்னால் நேர்மை இருக்க வேண்டும். ஒரு பெண் என்றால் அடக்கமாய் இருக்க வேண்டும். ஆண்கள் என்றால் வீரமாய் இருக்க வேண்டும். மாறியிருக்கக் கூடாது. அதே போல் கடவுள் என்று சொன்னால் கடவுளுக்குச் சில இலக்கணங்கள் உண்டு. என்ன இலக்கணம்? முதல் இலக்கணம் இறப்பும், பிறப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். நான்! செல்வதையெல்லாம் எப்பொழுதும் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். எத்தனையோ காலமாக எத்தனையோ நூல்களைப் படித்து அனுபவத்தில் சொல்லுகின்றேன். பிறந்தான், இறந்தான் என்று சொன்னால் அது கடவுள் அல்ல. நம்மைப் போல் பெரிய ஆத்மா என்று அர்த்தம். சிவபெருமானுக்கு இறப்பும் பிறப்பும் கிடையாது. சிவனே முருகன். முருகனே சிவன். ஆகவே முருகனுக்கும் இறப்பும், பிறப்பும் கிடையாது.

**''செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்''**

அருணகிரியாரின் கந்தரனுபூதி. ராமச்சந்திர மூர்த்தி அவதாரம் பண்ணின நாளை நாமெல்லாம் கொண்டாடுகிறோம். ஸ்ரீராம நவமி. கண்ணபிரான் அவதாரம் பண்ணின நாளைக் கொண்டாடுகிறோம், கிருஷ்ண ஜயந்தி. ஹனுமத் ஜயந்தி, சங்கர ஜயந்தி, மத்வ ஜயந்தி, ஸ்ரீராமானுஜ ஜயந்தி, பரசு ராம ஜயந்தி, வாமன ஜயந்தி. எந்தக் கோவிலிலாவது சிவ ஜயந்தி, சிவன் பிறந்தநாள் விழா, சுப்ரமண்ய சுவாமி ஜயந்தி, முருகன் அவதாரம் பண்ணின நாள் என்று இதுவரையிலும் உண்டா? கிடையாது. சுப்ரமண்ய ஜயந்தி, என்று கொண்டாடுவது கிடையாது. ஏன்? பிறப்பு இறப்பு இல்லாதவர் இறைவன். அதுதான் இறைவனுடைய லட்சணம். இந்தப் பாட்டில் வருகிறது.

**''ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்**
**ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி**
**வேதமும் கடந்து நின்ற விமல. ஓர் குமரன் றன்னை**
**நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்''**

நீர் தர வேண்டும். ஆண்டவனே! குழந்தையை நீரே தர வேண்டும். ''நீ தர ''- அது தங்களிடத்திலிருந்து வர வேண்டும். ''நின்னையே நிகர்க்க'' என்றார். சிவனுக்குச் சமானம் கிடையாது.

''சமானரஹிதம் விபும்'' என்று வேதம் சொல்லுகின்றது. சமானம் இல்லாத ஆண்டவனைப் பார்த்து உனக்குச் சமானமான குழந்தையைக் கொடு என்றால் என்ன பொருள்? நீயே குழந்தையாக வா என்று சொன்னால் உத்தரவு போட்ட மாதிரி இருக்கும். அப்படிச் சொல்லக்கூடாது. உனக்குச் சமானமான குழந்தையைக் கொடு என்றால், தேவரீரே குழந்தையாக வா என்று அர்த்தம்.

**''வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளாப்**
**புந்திக்குள் இடர்செய்யற்க புதல்வனைத் தருதும் என்னா''**

துன்பத்தை விட்டுவிடுங்கள். புதல்வனைத் தருதும் இப்பொழுதே குமரனைத் தருகின்றேன். 10 மாதம் தேவையில்லை. புதல்வனைத் தருதும் என்றார். ''அந்திக்கு நிகர் மெய் அண்ணல்''- செக்கர் வானம் போல் இருப்பான் பரமேசுவரன். செவ்வானம் போல சிவந்த மேனி.

**''அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரிந் தறிஞராயோர்**
**சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்.''**

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் இருந்தன. ஈசானம். தத்புருஷம், அகோரம், வாம தேவம், சத்யோ ஜாதம், அதோ முகம் ஞானிகளுக்குத் தெரியும். இப்பொழுது பரமேசுவரனுக்கு ஐந்து முகங்கள் இருக்கின்றன, ஞானிகளுக்கு மட்டும் தெரியக் கூடிய அதோ முகம் வெளிப்பட்டது. புலவர் பெருமான் எப்படிப் பாடுகிறார். ''சிந்திக்கும்'' - சிலவெல்லாம் சிந்தனையினாலேதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவர் அறிவாளியா. இல்லையா என்று நாமாக ஊகித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். பெரிய சபையில் ஒருவன் முன்னால் உட்கார்ந்து கொண்டு விரலைக் கடித்துக் கொண்டிருப்பான். நாம் அவரைப் பற்றி என்ன தீர்மானம் பண்ண வேண்டும். ஒரு மனிதனை உங்களுக்கு என்ன வயது என்று கேட்கலாம். சொந்த வீடு இருக்கிறதா என்று கேட்கலாம். என்ன உத்யோகம் என்று கேட்கலாம். உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள் என்று கேட்கலாம். உங்களுக்கு எவ்வளவு அறிவு என்று கேட்கக்கூடாது. அறிவு என்பது செயல் மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று - அது வெளியே தெரியாது. ஆகவே சுவாமிக்கு இப்பொழுது ஆறு திருமுகங்கள் தோன்றின. ஒரு முகம் ஞானிகள் தங்கள் ஞானத்தாலே அறிகின்ற முகம். ''அறிஞராயோர் சிந்திக்கும் தனது'' அந்த முகம் யாரிடத்திலும் இரவலாக வாங்கவில்லை. அவனுடைய முகம். அது நூதனமாக வரவில்லை. பழமையான முகம். தொல்லை என்றால் பழமை. ''ஆறும் கொண்டான்'' இந்த ஆறும் கொண்டான் என்பது முற்றும்மை. இலக்கணம் படித்தவர்களுக்கு தெரியும். முற்றும்மை என்று பெயர். ஏனென்றால் 7 முகம், 8 முகம் வருமோ என்று எண்ணம் வரும் என்று ஆறும்

கொண்டான் என்றார். சுவாமிக்கு ஆறு திருமுகங்கள் இருந்தன. அந்த ஆறும் அன்றைக்குக் கொண்டார். உதாரணம்: எனக்கு அவர் ரூ. 125 தரவேண்டும். மாதம் 12ம் போனேன். அவர் மனம் இளகவில்லை. மாதம் 12ம் போனேன் என்றால் 13வது மாதம் இல்லை. வாரம் 7ம் போனேன் என்றால் 8வது நாள் இல்லை என்று அர்த்தம். அதுபோல் ''ஆறும் கொண்டான்'' என்ற உம்மை முற்றும்மை. அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லை தொல்லையென்றால் பழைமையான. ''திருமுகம் ஆறும்கொண்டான்'' இப்பொழுது சிவபெருமானுக்கு ஆறு திருமுகம். அந்த ஆறு திருமுகங்களிலே நெற்றியிலே ஒரு கண் இருக்கும். அது ஞானக்கண். அது மேல் நோக்கி இருக்கும். விரூபாக்ஷன். அந்த ஆறு நெற்றிக்கண்களைத் திறந்தார். ஆறு அருட்பெரும்ஜோதி வெளிப்பட்டது. அதன் வெம்மை தாங்கமாட்டாது தேவர்களெல்லாம் திசைக்கு ஒருவராக ஓடினார்கள். எங்கே ஓடுகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டே ஓடினார் பிரும்மா. எல்லோரும் மூலைக்கு ஒருவராக ஓடிப்போய் ஒளிந்தார்கள். திரும்பவும் கைலாசத்தை நாடினார்கள். என்ன காரணம்?

ஹார்பரிலே கப்பல் இருக்கும். அந்தக் கொடியிலே ஒரு 25 காகங்கள் இருந்தன. மாலுமி கப்பலைச் செலுத்தி விட்டார். கப்பல் 500 மைல்கள் கடலில், பிரயாணம் செய்துவிட்டது. அந்தக் காகங்கள் எச்சமிடுகின்றன. மாலுமி தடி எடுத்து அடித்தார். அடிக்குப் பயந்த 25 காகங்களும் பறந்தன. எங்கே போகும்? திரும்பவும் அந்த கப்பலுக்கே வந்து விட்டது. அந்த உவமையைக் கச்சியப்பர் சொல்லியிருக்கிறார். ''கலம் தலை காகம் ஒத்த'' கலம் என்றால் கப்பல். தலை என்றால் மேல் பாகம். ''கலம் தலை காகம் ஒத்த'' தமிழ் எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார். கப்பல் மேலிருந்து காகம் அடிபட்டு மறுபடியும் திரும்பக் கப்பலுக்கே வருமாப்போலே, தாய் என்ன அடித்தாலும் அந்தச் சேய் மீண்டும் தாயிடமே வருமாப் போலே, பீதியுற்ற தேவர்கள் மீண்டும் கைலாசத்துக்கே வந்து. சுவாமி! நாங்கள் குழந்தையைக் கேட்டால் நெருப்பைக் கொடுக்கிறீர்களே என்றனர். ''நான் குழந்தையைத்தான் கொடுத்திருக்கிறேன். உங்கள் கண்ணுக்கு நெருப்பாய்த் தெரிகிறது'' என்று சிவபெருமான் அருள்புரிந்து அந்த விண்ணெல்லாம் பரவியிருக்கின்ற அருள் சுடர்களைச் சிறியதாகச் செய்தார். ஹிருதயத்திலிருந்து மேல் நோக்கி வந்தது. அருட்பெரும் ஜோதிகள். அதை வானத்திலே நின்று வாயுதேவன் பிடித்தார். அவர் தாங்க முடியாமல் அக்கினி தேவரிடம் கொடுத்தார். அக்கினி கங்கையில் கொண்டுவந்துவிட்டது. கங்கை வறண்டு திரண்டது. அது நிலத்துக்கு வந்தது. சரம் என்றால் தர்ப்பை. வனம் என்றால் காடு. சரவணம் என்றால் தர்ப்பைக் காடு. இயற்கையான ஒரு நீர்நிலை சரவணப் பொய்கை. செய்கையாகச் செய்தது தடாகம். இயற்கையாக இருப்பது பொய்கை. கானகத்திலே இயற்கையாகவே (தண்ணீர்) நீர்நிலை இருக்கும். நாம் தடுத்துச் செய்வது தடாகம். ஐந்து தலை இருந்தால் நாகம். ஒரு தலை இருந்தால் சர்ப்பம். சர்ப்பம் என்றாலும், நாகம் என்றாலும் இரண்டும் ஒன்றல்ல. பல தலை இருந்தால் நாகம். ஒரு தலை இருந்தால் சர்ப்பம். இதுதான் சர்ப்பத்துக்கும், நாகத்துக்கும் உள்ள வித்தியாசம். நாகராஜா என்றால் பல தலை உடையவன். சர்ப்ப ராஜா என்றால் ஒரு தலை உடையவன். தான தருமம் என்று சொல்கிறார்களே, தன்னைவிட மேலான வனுக்குத் தருவது தானம். எளியவர்களுக்குத் தருவது தருமம். ஆகவே தானம் வேறு. தருமம் வேறு. இப்பொழுது ஐந்து தலையுள்ள நாகம். ஆயிரம் தலை உடைய நாகம் தெய்வத்திடம் சம்பந்தமானது. அதுதான் நாகராஜா தெய்வம் என்று சொல்கிறார்கள். ஆகவே தடாகம் என்று சொன்னால் தடுத்துச் செய்தது. பொய்கை என்றால் இயற்கையாக இருப்பது. அந்தச் சரவணப் பொய்கையைச் சுற்றிலும் தர்ப்பைக் காடு. தர்ப்பைக்கு மின்சாரத்தை ஈர்க்கும் ஆற்றல் உண்டு. வானத்திலிருந்து, வாயுவிலிருந்து, அக்கினி தேவனிடம் மாறி தண்ணீரில் இறங்கி வருகிறது. அங்கே ஒரு தாமரைக் கமலம். 1008 இதழ் தாமரைக் கமலம். தண்ணீரை ஐஸ் பெட்டியில் வைத்தால் அது கட்டியாகிறது. ஹிமாசலத்தில் தண்ணீரெல்லாம் உறைந்து மலைபோல இருக்கிறது. நான் அமர்நாத்துக்கு போயிருந்தேன். ஐஸ் இளகித் தண்ணீராக வருகிறது. நான் 1 1/2 மைல் ஐஸ் மேலேயே போனேன். ஒரு பக்கம் ஐஸ் எல்லாம் இறுகிக் கெட்டியாக இருக்கிறது. ஐஸ் இளகி ஆறாக ஓடுகிறது. 14,500 அடி உயரம். ஆகவே அதிகக் குளிர்ச்சி தண்ணீரைக் கெட்டிப்படுத்துகிறது. அப்படி ஆண்டவன் அதிக கருணை கொண்டவன். உருவம் தாங்குகிறான். கடவுளுக்கு உருவம் கிடையாது, கருணையினாலேயே உருவம் பெறுகின்றான். ஆகவே

''அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர்
மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன்
உலகம் உய்ய''

- தொடரும்

நன்றி. செஞ்சொல் உரைக்கோவை நூல்

# திருத்தாண்டக அருளிப்பாடுகள்



முனைவர். அ.அறிவொளி

அப்பர் அடிகளின் திருத்தாண்டகங்கள் அரிய உணர்வுகள் தருவன.

வேறு நாயன்மார் பாடாதபடி இவர் மட்டுமே புதிய வடிவம் கொண்ட இப்பாடல்களைப் பாடினார்.

ஆறாம் திருமுறை முழுதும் (981) திருத்தாண்டகங்களே ஆகும்.

இவை அளவால் பெரியன. ஆழத்தால் அரியன. உணர்வால் உயர்ந்தன.

இதனால் அவரைத் தாண்டக வேந்தர் என்றே குறிப்பிட்டனர்.

அவர் பாடல்களில் காணும் ஒரு சொல்லால் பாடல்களுக்குப் பெயர் சூட்டினர்.

1. பெரிய திருத்தாண்டகம் - பெரும் என்ற சொல்லால் வந்த பெயர்.
2. புக்க திருத்தாண்டகம் - புக்க என்ற சொல்லால்
3. ஏழைத் திருத்தாண்டகம் - ஏழையேன் என்பதால்
4. அடையாளத் திருத்தாண்டகம் - அடையாளம் கூறியதால்.
5. போற்றித் திருத்தாண்டகம் - போற்றி என்பதால்
6. திருவடித் திருத்தாண்டகம் - திருவடி கூறுவதால்
7. காப்புத் திருத்தாண்டகம் - காப்பு எனும் சொல்
8. சேத்திரக் கோவை திருத்தாண்டகம் - தலங்களைத் தொகுத்தது
9. அடைவுத் திருத்தாண்டகம் - இதுவும் பலதலம் கூறியதே
10. கண்ட திருத்தாண்டகம் - கண்டேன் என்று பாடியதால்
11. பலவகைத் திருத்தாண்டகம் - பல செய்தி கூறுவதால்.
12. தனித் திருத்தாண்டகம் - தலம் பற்றிக் கூறாததால்.
13. திருவினாத் திருத்தாண்டகம் - வினா கேட்பதால்
14. மறுமற்றத் திருத்தாண்டகம் - பதில் கூறியதால்
15. அந்தந்த ஊர்ப் பெயர் சொல்லிவரும் திருத்தாண்டகம் பலவாம்.

இப்படி அவர் தாண்டகத்தை அனுபவித்த பெருமக்கள் அவற்றுக்குப் பெயர் கொடுத்து வழங்கியதைக் காண வியப்பாக உள்ளது.

ஒவ்வொரு தாண்டகத்தின் கடைசி அடியை மட்டும் பார்த்தால் அந்த ஊரில் அப்பர் பெற்ற அருள் அனுபவத்தை உணரமுடிகிறது.

நீயே, என்றும், தோன்றும், என்றும் இப்படி தனிச்சொற்கள் பாடல் தோறும் கூறினாலும் அப்பாடல்கள் அப்பெயர் வைத்து அழைக்கப் படவில்லை.

தில்லையில் பாடிய திருத்தாண்டகத்தில்

**''பெரியானை பெரும் பற்றப் புலியூரானைப்**

**பேசாத நாள் எல்லாம் பிறவாநாளே''**

என்று மிகவும் ஈடுபட்டுப்பாடுகிறார்.

அவ்வூர் இறைவனைத் தரிசித்த அளவில் முத்தி கிடைத்துவிடும் - யாரெல்லாம் அதைச் செய்யவில்லையோ அவர்கள் இன்னும் பிறக்கவில்லை என்கிறார்.

பிறந்திருப்போரைப் பிறக்காதவர் என்று கூறியதன் காரணம் இனிமேல் பல பிறவிகளில் பிறக்கப் போகிறார்கள் என்பதை இப்படிக் கூறினார்.

**''நானேதும் அறியாமே என்னுள் வந்து**

**நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்''.** என்று திருவானைக்காபதிகத்தில் பாடுகிறார். இறுதியடியில் இதை அறியாமல் நான் இருக்கிறேனே என்று வருந்துகிறார்.

நாம் எந்த முயற்சியும் செய்யாதிருந்தும் நமக்குள் இறைவன் வந்து நல்லதும் கெட்டதும் காட்டுவதைக் கொண்டாடுகிறார்.

**''புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே''** என்று இரண்டு பாட்டில் பாடியவர் பிற எட்டுப் பாடலிலும் **''பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே''** என்று பாடுகிறார். பதிகம் முழுதும் இப்படியே பாடுகிறார்.

என் புண்ணியத்தால் அவனைப் பார்த்தேன் என்றவர் - இப்படி நோக்கினால் எல்லாரும் பார்க்கலாம் என்பதைச் சொல்ல (பொய்யிலாதவன்) தவறாமல் காணப்படுபவன் என்று கூறுகிறார்.

காணவேண்டும் என்று மனத்தில் நினைத்துச் சென்றதாலும் அப்படிக் கண்டதை மறக்க முடியாததாலும் வலிவலத்தில் பாடியபோது

''வலிவலத்தான் காண் அவன் என் மனத்துளானே'' என்று மனத்தைத் திறந்து கூறுகிறார்.

பதிகம் முழுதும் இப்படியே பாடுகிறார்.

திருக்காளத்தியில் இருந்து கைலாயத்தைப் பாடியவர் அப்பர்.

அத்தலத்தில் ஒவ்வொரு பாடலிலும் பல ஊர் இறைவனாக அவன் இருப்பதை மனத்தில் காணுகிறார். ஆகவே கயிலை காளத்தி இரண்டையும் தரிசித்தது போல் என்றும் அத்தரிசனம் கண்ணை விட்டு அகலவில்லை என்றும் பாடுகிறார்.

**''கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்**
**காளத்தியன் அவன் என் கண்ணாளனே''**
என்பது அவற்றில் ஒரு பாடல்.

இதனால் யாவர்க்கும் இவரின் அனுபவம் வரக்கூடும் என்கிறார்.

காஞ்சிபுரத்தில் பெரும் பகுதியான ஆண்டுகள் வாழ்ந்தவர் ஆகையால் ஒவ்வொரு வருணனையிலும் 'காண்' என்று பாடிக் கடைசியில் என் எண்ணத்தில் வாழ்பவன் அவனே என்றும் பதிகம் முழுதும் முடிக்கிறார்.

**''நிறையார்ந்த புனல் கங்கை நிமிர் சடைமேல்**
**ஏற்றவன் காண் எழிலாரும் பொழிலார் கச்சி**
**ஏகம் பன்காண் அவன் என் எண்ணத் தானே''**
என்று பாடுகிறார்.

திருவாரூரில் மிகவும் ஈடுபட்டு ஞானசம்பந்தருக்கே அக்காட்சிகளை விளக்கியதால் அவ்வூர்ப் பதிகந்தோறும் - **''திருவாரூரான் காண் என் சிந்தையானே''** - என்று பாடுகிறார்.

தருமிக்குப் பொற்கிழியளித்ததை நினைத்துத் திருப்புத்தூர் தாண்டகத்தில் சிறப்பிக்கிறார்.

பாண்டிய நாடாகையால் ஆர்வம் மிகவே பாடித்

**''தென்காட்டும் செழும்புறவில் திருப்புதூரின்**
**திருத்தளியான் காண் அவன் என் சிந்தையானே''**
என்று முடிக்கிறார்.

திருவெண்ணெய் நல்லூர் அருகில் உள்ள திருமுண்டீச்சரத்தில் சிவலோகப்பதவியை அனுபவித்துப் பாடுகிறார்.

**''சிவலோகன் காண் அவன் என் சிந்தையானே''**
என்று பதிகம் முழுதும் பாடுகிறார்.

அந்த அந்தத் தலங்களிலே அப்பர் பெற்ற அருள் அனுபவங்களே திருத்தாண்டக முடிப்புச் சொற்கள் என்பதை இவைகொண்டே உணரலாம்.

நம் நினைவுக்குத் தொடக்கம் நம் நெஞ்சம். அது வளர்ந்து எங்கே போய் முடிகிறது என்றால் இறைவன் திருவடியே ஆகும்.

அதனால் இந்த நினைவோடு யாவரும் நினைப்பார்களாயின் அவர்கள் இறைவன் திருவடியில் நினைத்த அளவில் சென்று ஆனந்த அனுபவம் பெறுவர் என்பதைத் திருநெய்த்தானம் திருத்தாண்டகத்தில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும்

**''நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே''**
என்று உய்திக்கு உறுதியான வழியைக் காட்டுகிறார்.

இப்படிப் போகும் நினைவு பல விதமான அண்டங்களையும் கடந்து மேன்மேலும் போகும் என்பதை எண்ணித் திருவையற்றுத் திருத்தாண்டக்தில் பதிகம் முழுதும்

**''அண்டத்துக்கு அப்பாலாம் ஐயாறு அன்னே**
**என்று என்றே நான் அரற்றி அயர்க்கின்றேனே''**
என்று தன் அயர்வையும் கூறுகிறார்.

இவ்வூரில் தான் ஓர் அரிய செய்தியை அப்பரடிகள் வெளியிடுகிறார்.

**''ஓசைஒலியெலாம் ஆனாய் நீயே''** என்று எல்லா ஒலியும் இறைவனை அடையும் என்கிறார். ஆனாலும் திருவையாற்றிலிருந்து எங்கும் போகாமலே எல்லாமாய் இருக்கிறான் என்பதையும் இத்திருத்தாண்டகத்தில் பாடல் தோறும் பாடுகிறார்.

**'' தேசவிளக்கெலாம் ஆனாய் நீயே**
**திருவையாறு அகலாத செம்பொற்சோதி''**
என்பது முத்திரை முடிய ஆகும்.

ஒலிகள் யாவும் அவனாக இருப்பது போல் உலகின் ஒளிகள் யாவுமாய் அவனாக இருக்கிறான். என்று பாடுகிறார்.

விந்துநாதம் என்பன இவையே. இவை உலகிலும் நம் உடம்பிலும் தவறாமல் உள்ளன என்பது நினையத்தக்கது.

# அருணகிரியாரும் சூரபத்மனும்

மாணிக்க பெருமாள் என்ற பாலா
குளித்தலை

உலகில் எந்த மனிதனாலும் தவறு செய்யாமல் இருக்க முடியாது. ஏனென்றால் தான் செய்தது தவறு என்பது தவறு செய்தவர்களுக்கு தெரிவதில்லை. தெரியாமல் செய்தது கூட தவறில்லை. தான் செய்தது தவறு என்று தெரிந்த பின்னும் தன்னை திருத்திக் கொள்ளாதது பெருந்தவறு. இப்படி தவறின் மூலம் தன் அம்சமான உலக உயிர்களுக்கு ஒரு வாழ்வியல் நெறியை சொல்ல வேண்டும் என்ற இறைவன் விருப்பம் கெண்டான் போலும்.

மனிதர்களுக்கும், தேவர்களுக்கும் ஞானத்தை போதிக்கும் ஞான பூமியாகவும், உலகம் தோன்றியது முதல் இன்று வரை பல ஞான சீலர்களையும், தவமுனிவர்களையும் ஈன்றெடுத்த பெருமை கொண்ட திருவண்ணாமலையில் நம் அருணகிரிநாதர் அவதாரம் செய்தார்.

''பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் - காதல்
சிறந்த நின்சேவடியே சேர்ந்தேன்''

என்ற காரைக்கால் அம்மையார் வாக்கிற்க்கொப்ப குழந்தை பருவத்திலிருந்தே எம்பெருமான் முருகனை நினைந்து, நினைந்து, நெகிழ்ந்து, நெகிழ்ந்து பக்தி கொண்டார். அதே நேரத்தில் பெண்கள் விஷயத்தில் அதிகமான தவறுகள் செய்தார். பின்னால், தான் செய்தது தவறு என்பதை தன் சகோதரி மூலம் உணர்ந்தபோது ''ஐயோ இப்படி தவறு செய்து விட்டோமே'' என்று நினைத்து அவருடைய மனசாட்சி விழித்துக் கொண்டது.

ஆம், நாம் செய்த தவறை உணர்வதென்பது மறுபிறப்பு. இறைவனின் ராஜபாட்டையில் காலடி எடுத்து வைப்பதாகும். அதாவது ''ஆத்ம விழிப்பு'' என்றும் சொல்லலாம். அப்படியொரு ஆத்ம விழிப்பு ஏற்பட்டு விட்ட பிறகு தான் செய்த தவறுக்குத் தானே தண்டனை கொடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு அருணகிரி பெருமான் வந்தார். அருணாசலேஸ்வரர் கோயிலில் உள்ள வள்ளால மகாராஜா கோபுரத்தின் மீது ஏறி உயிரை விடுவதென முடிவு செய்தார். முடிவின் படியே கோபுரத்தின் மீது ஏறி விழுந்தார்.



அப்போது கருணைக்கடல், சேவற்க் கொடியோன், தகப்பன் சுவாமி ஞான பண்டிதன், தேவ சேனாபதி, வினைகளை வேறுப்போன், மூவர்க்கும் மேலோன் ஆன எம்பெருமான் முருகன், அங்கே தோன்றி அருணகிரி பெருமானை தன் கைகளில் ஏந்தி பின் பூமியில் விட்டு ''சும்மாயிரு'' என்ற மகா மந்திரத்தை சொல்லி விட்டு மறைந்தார். அருணகிரியாரின் ஆத்மா ஒருமுகப்பட்டது. ஒருமுகப்பட்ட மனது எம்பெருமான் முருகன்

அமரும் மயிலாகும். நான், எனது, ஆசைகள், கோபங்கள், வினைகள் போன்ற மாற்று சக்திகளுக்கு அங்கே வேலையில்லை. ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம் தான்.

அதன்பின் அருணகிரியார் எம்பெருமான் முருகப் பெருமானை விடவில்லை. தூணை கைகளால் பற்றிக் கொண்டு, சுற்றும் குழந்தையைப் போல, தன் மனம் என்னும் மயில் வாகனத்தில் திருமுருகனை அமர வைத்த அருணகிரி பெருமான் உலகளவில் இருந்தாலும் அவர் மனம் மட்டும் கார்த்திகை மைந்தனிடமேயிருந்தது.

இந்த மனமானது இறைவனிடம் இருக்க அவர் பின்பற்றிய வழி என்னவென்றால் அத்தீய வழியிலிருந்து இறைவன் காப்பற்றியதையும், தான் செய்த தவறையும் திரும்ப, திரும்ப நினைத்தல் தான்.

**''மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்**
**பட்டுசல் படும் படல்''**
**''வளைபட்ட கைம்மா தரொடு மக்கள் எனும்**
**தளை பட்டு அழியத் தகுமோ''**
**''சிங்கார மடந்தையர் தீ நெறியோய்**
**மங்காமல் எனக்கு வரம் தருவாய்''**

ஆகவே உலகில் தவறு செய்யாதவர் இல்லை. தான் செய்த தவற்றை தவறு என்று உணர்ந்து மனம் திருந்தும் போது இறைவன் மன்னிப்பான். அதன் பிறகு மீண்டும் தீய வழியில் போகாமல், இறைவனிடம் நம்மை பூரணமாக ஒப்புவித்து இறை வாழ்க்கை வாழ வேண்டும் என்னும் வாழ்வியல் நெறியை அருணகிரி பெருமானின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது.

அதே நேரத்தில் சூரபத்மனை எடுத்துக் கொள்ளுங்கள். சிறந்த பக்திமானாக இருந்தாலும் பல்வேறு வகை சக்திகளையும், வரங்களையும், நன்றிமறத்தல் கூடாது என்னும் மேலான பண்பாட்டினை உயர்ந்த வாழ்வியலை தன் வாழ்க்கையில் பின்பற்றாததால் அழிந்து போனான். இதையே நம் வள்ளுவர் பெருமான்

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்-உய்வில்லை**
**நெய்நன்றி கொன்றமகர்க்கு''**

என்று உறுதியாக கூறுகிறார். தமக்கு வரம் கொடுத்த பரமேஸ்வர பரம்பொருளே, முருகனாக முன் நிற்கிறது என்பது தெரிந்தும். பரம்பொருளோடு போரிட முற்பட்ட சூரபத்மனின் செயலே இங்கு சுட்டி காண்பிக்கப்படுகிறது.

அருணகிரி பெருமான் தன் தவறை உணர்ந்ததும் தன்னை முழுவதும் இழந்த நிலையில் அதாவது குழந்தை நிலைக்கு வந்து முழுதுமாக இறைவனிடம் தன்னை ஒப்புவித்து கொண்டார். சூரபத்மனோ ''செய் நன்றி மறத்தல்'' என்னும் தீயநெறி போனதோடு, நான் எனது என்ற ஆணவமும், மாயையும் சேர்ந்து கொள்ள தன் முன் நிற்கும் இறைவனை குழந்தையாகவே நினைத்து அழிந்து போனான்.

பெண்ணாசையின் உச்சத்தில் தன் முன் நிற்கும் இறைவனை வெறும் மனிதனாக நினைத்து அழிந்து போனான் ராவணன். மண்ணாசையால், தன்முன் நிற்கும் பரம்பொருளை ஒரு வித்தைக்காரனாக நினைத்து அழிந்து போனான் துரியோதனன்.

இம்மூவருமே நேர்மை, நெறியான வாழ்வியலை விட்டு, எதிரான வழியில் போனதாலும், இறைவனை அறிய முடியாமல் போனதாலும் அழிந்து போனார்கள். தீயசெயலானது இறைவழிக்கு மாறானது, இறை அருளுக்கு மாறானது. அசுரர்களுக்கு அழிவைக் கொடுத்தது. நம்மைப் போன்ற மானிடர்களுக்கு ஊழ்வினையாகி பிறப்பைக் கொடுக்கிறது. அதனால் தான் இந்த இந்திய மண்ணின் உயிரோட்டமாய் விளங்கும் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் ''ஆண்டவன் அருளுக்கு புறம்பானது எதுவும் வேண்டாம்'' என்கிறார்.

ஆகவே, நமக்கு இறையருளும் வேண்டும். ஊழ்வினையாகக் கூடிய தீயசெயல்களை செய்யாதிருக்க வேண்டும். அதற்கு பரம்பொருளாம் முருகப் பெருமானிடம் முழுதுமாக நம்மை ஒப்புவித்து நினைந்து, நினைந்து, நெகிழ்ந்து, நெகிழ்ந்து அப்பெருமானின் பாதங்களில் அன்று பூத்த, அன்பு பூத்த மலராக போய் சேர்வதே அருணகிரியார் நமக்கு காட்டும் வழியாகும்.

# நூல் மதிப்புரை




ஔவை இலக்கியங்களை எளிய கருத்துரையுடன் சிறிய நூல்களாக வெளியிடுதல், இல்லங்கள் தோறும் நடைபெறும் விழாக்களில் ஔவையின் நீதி நூல்களை வழங்குதல், ஔவையின் புராண சரித்திர புலவர் காலங்களின் வரலாறுகளைத் தொகுத்து வெளியிடுதல், ஔவையின் இலக்கியங்களை வெளியிடுதல் போன்ற அரும்பெரும் பணிகளைச் செய்து வரும் ஔவைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் ''ஔவைத் தமிழ் அமுதம்'' எனும் நூலை வெளியிட்டுள்ளார். அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய இந்நூல் ஔவையின் புகழை பறைசாற்றும் என்பதில் சற்றும் அய்யமில்லை.

நூலின்விலை : ரூ 50/-

பதிப்பகம் மற்றும் வெளியிட்டோர் : சுடர்மணி பதிப்பகம்
19, பஜனை கோயில் தெரு
சூளைமேடு, சென்னை - 94

பெண், பொன் ஆசைகள் அழியாத வரையில் ஒருவராலும் ஈஸ்வரனைக் காண முடியாது. விஷப் பாம்புகள் நடமாடும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் வெகு ஜாக்கிரதையாக இருப்பதைப் போலவே உலகில் வாழும் மக்களும் பெண், பொன் போன்ற உலக ஆசைகளுக்கு ஆட்படாமல் எப்போதுமே ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும். பெண், பொன் ஆசைகள் உள்ளத்தை விட்டு அகலும்போது ஆத்மாவிடம் வேறு என்னதான் தங்கியிருக்க முடியும்? பிரம்மானந்தமே அந்த இதயக்கோயிலில் குடி கொண்டிருக்கும்.

- பகவான் இராமகிருஷ்ணர்


**திருக்கோயில் திங்கள் இதழ்**




| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# திருஇரும்பூளை என்னும் ஆலங்குடி

## (குரு பரிகாரஸ்தலம்)



அருள்மிகு கலங்காமற் காத்த விநாயகர்

1. தலமும் இருப்பிடமும்

வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டிலே திருவாரூர் மாவட்டத்தில் வலங்கைமான் வட்டத்தில் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு வடக்கே 7 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து தெற்கே 17கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து மன்னார்குடி (நீடாமங்கலம் வழி) பேருந்து மார்க்கத்திலும் உள்ளது இத்திருத்தலம். சோழ நாட்டில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற 274 தலங்களில், காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில் 98 ஆவது தலமாக விளங்கிவரும் தலமாகும்.

**தலப்பெயர்கள்**

காசி ஆரண்யம் - திருஇரும்பூளை - ஆலங்குடி என்ற பெயர்களால் வழங்கப்பெறுவது, திருஞானசம்பந்தப் பெருந்தகையால் எழிலார் இரும்பூளை என அருளப் பெற்றது. பாற்கடல் கடைந்தபோது உண்டான ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி அபயம் புகுந்த தேவர்கள் வேண்டுகோளுக்கு இறங்கிய சிவபெருமான் தோழனாகிய சுந்தரமூர்த்தியைக் கொண்டு விஷத்தைக் கொண்டுவரச் செய்து குடித்துக் கண்டத்து அடக்கியமையினால் அப்பெயர் பெற்றது. இதை விளக்கும் காளமேகப் புலவர் பாடலும் இருக்கிறது. அது

''ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான் என்று ஆர்சொன்னார்- ஆலம்
குடியானே யாகில் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதினில்''

இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை.

**கோயிலமைப்பு**

கோயில், ஊரின் மத்தியிலே நான்கு புறமும் தாமரை பூத்த அகழியாலும் உயரமான மதில்களாலும் சூழப்பெற்று மிகவும் அழகான தோற்றத்துடன் கூடிய ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் காட்சியளிக்கிறது. தென்புறம் அமைந்த இந்தக் கோபுரத்தில் பழமையான சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன. கோபுர வாயிலுள்ளே பிரவேசித்ததும் மேலக்குடவறையில் கலங்காமல் காத்த விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. அவரை வணங்கி உள்ளே நுழைந்தால் முதல் பிரகாரம் காணப்படுகின்றது. எதிரே அம்மையாரின் தெற்கு நோக்கிய சந்நிதி காணப்படுகின்றது. கொஞ்சம் உள்ளே போய் மேற்கு நோக்கித் திரும்பி இரண்டாவது வாயிலைக் கடந்ததும் உள்ளே தென்புறம் உள்ள கீழ்த் திருமாளப் பத்தியில் சூரியர் சந்நிதி இருக்கிறது. தென்புறம் உற்சவ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய திருக்கோலத்துடன் அருள்பாலிக்கிறார். அடுத்தாற்போல் தெற்குத் திருமாளப் பத்தியில் (உள் பிரகாரத்தில்) நால்வர் திருவுருவமும், சூரியேசர் சோமேசர், குருமோக்ஷேசுரர், சோமநாதர், சப்தரிஷி நாதர், விஷ்ணு நாதர், பிரமமேசர் ஆகியசப்த லிங்கங்களோடு காசிவிஸ்வநாதர் விசாலாக்ஷி, அகத்தியரும் உள்ளனர். மேலத் திருமாளப்பத்தியில், ஆக்ஞா கணபதி, சோமாஸ்கந்தர், பெரும் திருவுருவத்துடன் கூடிய கலங்காமல் காத்த விநாயகர், நின்ற கணபதி, சந்திரசேகரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, பக்தர், சண்டேசுரர், கல்யாண சாஸ்தா, ஸப்தமாதா முதலிய உற்சவர்களும், அடுத்து முருகன், வள்ளி தேவசேனை சன்னதியும் இலக்குமி இருப்பிடமும், வடக்குத் திருமாளப்பத்தியில் நவக்கிரஹம், சபாபதி, சிவகாமி அம்மை, சம்பந்தர், அப்பர், மணிவாசகர் முதலியோரும் காட்சி

தருகிறார்கள். சபாநாதர்சந்நிதியில் திருமுறைக் கோயிலும் அமைந்துள்ளது. அடுத்து உத்ஸவ தக்ஷிணாமூர்த்தி, சனகாதி நால்வருடன் காட்சி தருகிறார். கீழ் திருமாளப்பத்தி வடபுறம் பைரவர், சந்திரன் சந்நிதியும் உள்ளது. சுவாமி மகா மண்டபத்தில் நந்தி, பலிபீடம் (செப்புத் திருமேனியுடன்) உள்ளது. மகா மண்டப வாயிலில் துவார பாலகரும் கருவறையில் கிழக்கு நோக்கி ஆபத்சகாயரும், அர்த்த மண்டபத்தில் பள்ளியறை சொக்கரும், போகசத்தி அம்மையும் உள்ளனர். தெற்கு கோஷ்டத்தில் கணபதியும், அடுத்து இத்தலத்து சிறப்பு மூர்த்தியாகிய குரு தக்ஷிணாமூர்த்தி இருப்பிடமும் மேலக் கோஷ்டத்தில் லிங்கோத்பவரும், வட கோஷ்டத்தில் பிரம்மா, துர்க்கை, சண்டேசுரரும் அடுத்து ஞானகூபம் என்னும் தீர்த்தக் கிணறும் உள்ளன. வெளியே சுக்கிரவார அம்மன் சந்நிதியும் பள்ளியறையும் உள்ளன. தெற்கு நோக்கிய அம்மன் சந்நிதி தனியான பிரகாரத்துடன் உள்ளது. துவார சக்தி, செப்பு நந்தி பலி பூடமும், கீழ்ப்புறம் யாகசாலையும், பாகசாலையும், அன்னதான சமையல் கூடமும் கீழ்த்திருவாயிலும் அடுத்து தென்புறம் வடக்கு பார்த்து சப்தமாதா ஆலயமும், வடபுறம் திரு நந்தவனமும் உள்ளது.

மூர்த்திகள்

**இறைவன் பெயர்கள் - காசி ஆரண்யேசுரர், ஆபத்சகாயர்**

**இறைவி பெயர்கள் - ஸ்ரீ உமையம்மை, ஏலவார்குழலியம்மை**

**விசேடமூர்த்தி - ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி**

**விசேடதலம் - ஸ்ரீ குரு பரிகார ஸ்தலம்**

**தீர்த்தங்கள்**

1. பிரம்ம தீர்த்தம் - தெற்கு சந்நிதியில் உள்ளது. அதில் தீர்த்த உத்ஸவ மண்டப அடித்தளம் மட்டும் காணப்படுகிறது.

2. இலக்குமி தீர்த்தம் - மேல வீதிக்கு மேல்புறம் உள்ளது. அது ஆயக்குளம் என வழங்குகிறது.

3. இந்திர தீர்த்தம் - கீழ வீதிக்கு கீழ்புறம் உள்ளது. செட்டித்தோப்பு குளம் என வழங்குகிறது.

4. அக்னி தீர்த்தம் - அருகில் உள்ள கிராமமாகிய பூனாயிருப்பில் உள்ளது.

5. யம தீர்த்தம்- அருகில் உள்ள நரிக்குடி என்ற கிராமத்தில் உள்ளது.

6. நிருதி தீர்த்தம் - அருகில் உள்ள



புலவநத்தம் கிராமத்தில் உள்ளது.

7. வருண தீர்த்தம் - அருகில் உள்ள பூந்தோட்டம் கிராமத்தில் உள்ளது.

8. வாயு தீர்த்தம் - அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் உள்ளது.

9. குபேர தீர்த்தம் - அருகில் உள்ள கீழ அமராவதி கிராமத்தில் உள்ளது.

10. ஈசான தீர்த்தம் - அருகில் உள்ள சித்தன் வாழும் கிராமத்தில் உள்ளது.

11. சூரிய தீர்த்தமும்.

12. சந்திர தீர்த்தமும் - கீழ்த்திசையில் உள்ளன. இரண்டு தீர்த்தங்களும் இருந்த இடங்கள் சோமேசுரம் என்றும் சூரியேசுரம் என்றும் வழங்கப்படுகின்றன.

13. அமுதபுட்கரணி - ஆலயத்தைச் சுற்றி அகழியாக உள்ளது.

14. ஞானகூபம் கிணறு - சுவாமி மகா மண்டபத்தில் திருமஞ்சனக் கேணியாக உள்ளது.

15. பூளை வள ஆறு - கிழக்கில் உள்ளது. துலா மாதத்தில் இதன் தீர்த்தத்தைக் கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்து வருகிறார்கள்.



### தலப்பெருமை

இத்திருத்தலம் காவிரி நதியின் தென்கரையில் ஒருகாத தொலைவில் உள்ளது. சீரும் சிறப்பும் பெற்றது. தேவர்கள் அமுதம் கடைந்தபோது ஏற்பட்ட விஷத்தினால் அவதியுற்று ஆண்டவனை வழிபட, ஆலமாகிய விஷத்தைக் குடித்துக் காத்தமையால், இவ்வூருக்கு ஆலங்குடி எனவும், இறைவனுக்கு ஆபத்சகாயர் எனவும் பெயர்வழங்கப்படுகின்றது. இந்த ஊரில் அரவு தீண்டி மரித்தவர் இல்லை. கஜமுகாசுரனால் தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்கு கலங்காமல் காத்த விநாயகர் எனப் பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனை திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமண மங்கலம் எனப் பெயர் வழங்கப் பெறுகிறது. மத்தியார்ச்சுன மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரத் தலமாக உள்ளது. திருவிடைமருதூருக்குப் பரிவாரத் தலமாக உள்ளது. திருவிடை மருதூருக்குப் பரிவாரதலங்களாவன.

1. திருவலஞ்சுழி (விநாயகர்) 2.திருவேரகம் (முருகன்) 3.திருவாவடுதுறை (நந்தி) 4.சூரியனார் கோயில் (நவக்கிரகம்) 5.திருவாப்பாடி (சண்டேசுரர்) 6. சிதம்பரம் (நடராஜர்) 7. சீர்காழி (பைரவர்) 8. திருவாரூர் (சோமாஸ்கந்தர் தியாகேசன்) 9.ஆலங்குடி (தக்ஷிணாமூர்த்தி) பஞ்சவாரண்ய தலங்களாகிய 1.திருக்கருகாவூர், 2.திருஅவளிவநல்லூர், 3.திருஅரதைப் பெரும்பாழி எனும் ஹரித்துவாரமங்கலம் 4. திருஇரும்பூளை என்கிற ஆலங்குடி, 5.திருக்கொள்ளம்புதூர் இவைகளில் இத்தலம் நான்காவது தலமாக உள்ளது. விசுவாமித்திரர் பூஜித்தத் தலம். அம்மையின் திருமணத்திற்கு வந்த திருமால், பிரம்மா, இலக்குமி, கருடன், அஷ்டதிக்கு பாலகர், ஐயனார், வீரபத்திரர் முதலானோர் தம் தம் பெயரால் லிங்கங்கள் நிறுவி பூஜித்து வழிப்பட்ட தலம். முசுகுந்த சக்ரவர்த்தி, சுவாசனன், சுந்தரர் முதலியோர் வழிபட்டத்தலம், திருஞான சம்பந்தரால் பதிகம் பெற்றது. அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் சேர்த்துப் பாடப்பெற்ற சிறப்புடையது திருஞான சம்பந்தர் தமது பாடல்களால் இத்தல அம்மனை சிறப்பித்து பாடியுள்ளார்.

### புராண வரலாறும், வழிபட்டோரும்

பல தலங்களையும் தரிசித்து, இந்தத் தலத்துக்கு வந்துகொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அகத்திய காவிரி என்னும் வெட்டாறு, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த காரணத்தால், கரையில் அடியார்களுடன் மனம் கலங்கி நிற்க, காசியாரண்யேஸ்வரராகிய ஆபத்சகாயர் ஓடக்காரனாக வந்து இக்கரைக்குக் கொண்டு விடுவதாகச் சொல்லி பவுன்கள் பெற்று, முதலில் அடியார்களில் சிலரை இக்கரை கொண்டுவந்து சேர்த்து மீண்டும் சுந்தரரிடம் போய் அடையாளச் சன்மானம் கேட்டுப் பெற்று அவரை ஏற்றி வருகையில் நடு ஆற்றில் திருவிளையாடலாக சுழல் ஏற்படும்படி செய்து, பற்றுக்கோலை நழுவவிட்டு எடுப்பதைப் போல் பாசாங்கு செய்து தானும் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன் போல் நிற்க, படகில் உள்ள நாயனார் இறைவனை வேண்ட ஓடம் சிறிது தூரம் சென்று பாறையில் மோதி நொறுங்கியது. சிவபெருமான் ரிஷபாருடராகத் தோன்றி யாவரையும் தூக்கிக் காப்பாற்றியதாக வரலாறு வழங்குகிறது. பின்பு சுந்தரர் தலத்துக்கு வந்து முறைப்படி வணங்கி வழிபட்டு தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்து ஞானோபதேசம் பெற்றார். இந்தத் தலத்தில் உள்ள குருமூர்த்தியை குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு சிவஞானம் எளிதில்

கைகூடும். மீண்டும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார்கள் கூட்டத்துடன் அரவூர் கார்கோடகேஸ்வரரை வழிபட்டு நீடாமங்கலத்திலுள்ள சக்ரவாகப் பக்ஷியால் பூசிக்கப் பெற்ற கோமுகேஸ்வரரை வழிபட்டார்.

திருவாரூரில் நடைபெறும் விழாவில் அப்பொழுது அரசாண்ட ஈசசோழராஜா எல்லாத் தலங்களிலும் உள்ள சுந்தரமூர்த்தி திருவுருவங்களைக் கொண்டு வந்து விழா நடத்தினான். எல்லா சுந்தரமூர்த்திகளையும் விட ஆலங்குடியில் உள்ள சுந்தரர் திருஉரு அவன் மனதைக் கவர்ந்துவிட்டது. அதைத் திருவாரூரிலேயே வைக்க வேண்டுமென்று விரும்பினான். அதை அறிந்த ஆலங்குடி ஆதி சைவசிவாச்சாரியர்கள் குழந்தைக்கு அம்மை போட்டிருப்பது போல் தொட்டில் கட்டி ஆலங்குடி கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்த அம்மைத் தழும்புகளை இன்றும் பெருமாள் மீது காணலாம்.

**வழிபட்டோர்கள் :** ஆதிசங்கரர் குருமூர்த்தியைத் தரிசித்து சிவஞானம் பெற்றார். இந்திரன் முதலிய அஷ்டதிக்கு பாலர்கள் இறைவனை வழிபட்டுத் தம் பெயரால் தீர்த்தமும் சிவலிங்கமும் நிறுவி பூஜித்து தங்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் நீங்கிப் பேறுபெற்றார்கள். சுவாசனன் என்ற அரசன் பஞ்சமாபாதகங்களை அஞ்சாமல் செய்து அழிந்து நரகம் அடைந்து துன்புற்று பின், பூலோகத்தில் பைசாசமாக அலையும் போது, முன் நல்வினையால் அகத்தியரைச் சந்தித்து அவரையும் துன்புறுத்த முயலும்போது, அவர் உபதேசித்தபடி இத்தலத்தை அடைந்து தீர்த்தமாடி வழிபட்டு, இழந்த செல்வத்தையும் பேரரசையும் திரும்பப்பெற்றான்.

**பார்வதியார்:** கைலாசத்தில் பார்வதி அம்மையார்தோழியர்களோடு பந்தாடியபோது உயரப்போன பந்தை பிடிக்கக் கையை உயரத் தூக்கி பந்தை எதிர்பார்த்து நிற்க, வானவீதியில் சென்ற சூரியன் தன்னை நிற்கச் சொல்வதாகக் கருதி தேரை நிறுத்த, அவன் தொழில் தடைப்பட்டு உலகம் அவதியுற்று சிவபெருமானிடம் முறையிட அவர் சாபத்தின் காரணமாகப் பூலோகத்தில் காசியாரண்ய தலத்தில் அவதரித்து, தவம்செய்து, இறைவனைத் திருமணம் செய்து கொண்டார்.

**முசுகுந்தச் சக்ரவர்த்தி :** முசுகுந்தச் சக்ரவர்த்தி தன் மந்திரியும் சிவபக்தருமான அமுதோகர் என்பவருடைய சிவ புண்யத்தில் பாதியேனும் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்க, மந்திரி சம்மதியாமையால் அவர் தலையைக் கொய்யும்படி உத்தரவிட, கொலைஞர் வாளேந்தியவுடன் சிவனாணையால் உயிர் உடனே நீங்கவும், இதன் அடையாளமாக அமுதோகன் என்ற சப்தம் தலம் முழுவதும் குடிகொள்ள, அரசன் வியந்து, அபசாரத்தை நினைந்து வழிபட்டு இத்தலத்து இறைவனை வணங்கிப் பாபம் நீங்கப் பெற்றான்.

**திருவிழாக்கள்**

பஞ்ச பருவ உற்சவம், மாதாந்திர குருவாரந்தோறும் விசேஷ தரிசனமும், குருபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு பிரவேசிக்கும் காலங்களில் குருப்பெயர்ச்சி லக்ஷார்ச்சனையும் நடைபெறும். பிரதி வருஷ மாசி மாத குருவாரத்தன்று புனித நீர் கொண்டு வருதலும் பஞ்சமுக தீபாராதனையும், மாசி மாத கடைசி குருவாரத்தன்று சங்காபிஷேகமும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனையும் நடைபெறுகிறது. தைப்பூசத்திலும், பங்குனி உத்திரத்திலும் தீர்த்தவாரி நடைபெறுகிறது. சித்திரைப் பவுர்ணமியைக் கொண்டு பத்துநாள் உற்சவ விழாவும், தெக்ஷணாமூர்த்திக்கு தேர் விழாவும் கொண்டாடப்படுகின்றது.

இத்தகைய சிறப்புகள் கொண்ட திருஆலங்குடித் திருத்தலத்திற்குச் சென்று குருவருள் பெறுவோமே.



சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் (பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., உதவி ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 21. தொலைபேசி : 25967929



திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் ஆழித் தேரோட்டம் நாள் 23.4.2007



ஆழித்தேரோட்ட விழாவில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி அவர்கள், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் திரு. பூண்டி கே. கலைச்செல்வன் அவர்கள், திருவாரூர் நகர மன்றத் தலைவர் திரு. கு.தென்னன் அவர்கள், திருவாரூர் நகர மன்றத் துணைத் தலைவர் திரு. இரா. சங்கர் அவர்கள், தஞ்சை மண்டல இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர் திரு. ச. இளங்கோ அவர்கள், உதவி ஆணையர் திரு. க. பழநியப்பன் அவர்கள் மற்றும் பக்த பெருமக்கள்.



பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருச்செந்தூர்

## 2007 ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா - அழைப்பிதழ்

21.5.07 முதல் - 30.5.07 முடிய — வைகாசி வசந்த உற்சவம் - நாள்தோறும் அருள்மிகு ஜெயந்திநாதர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்து மாலை தங்கத் தேரில் பவனி வருதல்.

30.5.2007 - வைகாசி விசாகம்.

வைகாசி விசாகத்தன்று இரவு அருள்மிகு ஜெயந்திநாதர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிப் பராசரமுனி குமாரர்களுக்குச் சாப விமோசனம் அளித்தல்.

## பக்தர்களுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள்

1. பக்தர்கள் தரிசனம் செய்வதற்குத் தரிசன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. விசாக தினத்தன்று சண்முகப் பெருமானுக்குச் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாரதனை நடைபெறும்.
3. கார்த்திகையன்று அருள்மிகு ஜெயந்திநாதர் சிறப்பு அபிஷேகம், மாலை திருவிளக்குப் பூஜை, இரவு தங்கரதப் புறப்பாடு நடைபெறும்.
4. சித்திரை முதல் நாள் மற்றும் ஐப்பசி முதல் நாள் அருள்மிகு சண்முகப் பெருமானுக்கு அன்னாபிஷேகம், சிறப்பு வழிபாடு நடைபெறும்.
5. இத்திருக்கோயிலில் பன்னீர் இலை விபூதி பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
6. இத்திருக்கோயிலில் அனைவருக்கும் நல்ல சந்தனம் வழங்கப்பட்டு வருகிறது.
7. ஒவ்வொரு தமிழ் மாதக் கடைசி வெள்ளியன்று 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
8. நன்கொடையாளர் பங்களிப்புடன் கூடிய அன்னதானத் திட்டத்தின் கீழ் தினசரி 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
9. திருக்கோவிலில் ஞாயிறுதோறும் மாணவர்களுக்கு ஆன்மிக ஒழுக்கநெறி பயிற்சி வகுப்பு, திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.

வைகாசி விசாகத்திருவிழாவில் பக்தர்கள் கலந்து கொண்டு செந்திலாண்டவர் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம்**

போ.இராமராஜு, பி.எஸ்ஸி.பி.எல்.,
இணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி

திரு சி. தேவதாசசுந்தரம் பி.இ., எம்.ஐ.இ.
அறங்காவலர் குழுத்தலைவர்

**அறங்காவலர்கள்**

திரு பழ. படிக்காசு

திரு சு.கு. சந்திரசேகரன், பி.எஸ்ஸி.பிஎல்.

திருமதி பா. திலகவதி

திரு யோ. தங்கத்துரை